# மின்சார நுகர்வோரின் உரிமைகளும் கடமைகளும்

*2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 3(1)(உ) பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட ஒரு கூற்று*

*வெளியீடு - 1 (2014 ஜுலை)*

*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு*

## *பின்னணி*

*2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 3(1)(உ) பிரிவானது குறித்த சட்டத்தின் I ஆம் மற்றும் II ஆம் அட்டவணைகள், 23 முதல் 29 வரையான பிரிவுகள் ஆகியவற்றின் கீழ் எழுகின்ற மின்சார நுகர்வோர் உரிமைகளையும் கடமைகளையும் குறிப்பீடுசெய்கின்ற ஒரு கூற்றை உள்ளடக்கிய ஆவணத்தை மின்சார செலுத்துகைக்கும் மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கும் அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்புகளுடன் கலந்தாலோசித்த பின்னர் பிரசுரிப்பதற்கு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவைத் தேவைப் படுத்துகின்றது. குறித்த கூற்று அடங்கிய இந்த ஆவணமானது அந்த மின்சாரச் சட்டத்தின் மேற்கூறப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணம் மின்சார நுகர்வோரை பின்வருவன பற்றி விழிப்பூட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

- *மின்சார நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு அவசியமான சேவையின் தரம், மற்றும் உரிமைகள் சேவை வழங்கும் தரப்புகளிடம் இருந்து நியாயமான விதத்தில் எதிர்பார்க்கப்படுவது*
- *சேவை வழங்கும் தரப்புகள் திறமை வாய்ந்த மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான மின்சார நுகர்வோரின் கடமைகள்*

*குறித்த கூற்று அடங்கிய இந்த ஆவணமானது மின்சாரம் சார்ந்த கைத்தொழிலில் மின்சார நுகர்வோர், சேவை வழங்கும் தரப்புகள் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகிய மூன்று முக்கிய தரப்புகளுக்கும் மத்தியில் ஒரு உறுதியான நம்பிக்கையையும் பொறுப்பு உணர்வையும் ஏற்படுத்தும் எனவும் சேவை வழங்கும் தரப்புகளும் மற்றும் ஆணைக்குழுவும் மின்சார நுகர்வோருக்கு சிறந்த சாத்தியமான சேவை கிடைக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கும் ஒரு திடமான அடித்தளத்தை இடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.*

*உள்ளடக்கம்*


***பாகம் I - பொதுவான ஏற்பாடுகள்* ........ 1**

*A.* *அடிப்படை உரிமைகள்*........ 1

*B.* *அடிப்படை கடமைகள்*........ 1

***பாகம் II - மின்சார நுகர்வோர் உரிமைகள்* ........ 2**

*A.* *ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளுதல்* ........ 2

*B.* *மின்சாரத் துண்டிப்பும் மின்சார மீளிணைப்பும்* ........ 6

*மின்சாரத் துண்டிப்பு* ........ 6

*மின்சார மீளிணைப்பு* ........ 7

*C.* *பிணை சார்ந்த வைப்புத் தொகை* ........ 8

*D.* *மின்மானியும் மின்மானி வாசிப்பும்*........ 9

*E.* *மின்சார நுகர்வுக் கட்டணங்களை அறவிடுதல்*........ 12

*மின்சாரக் கட்டணம்* ........ 12

*மின்சாரப் பாவனை மதிப்பீடு* ........ 13

*கொடுப்பனவுகள்* ........ 14

*F.* *நுகர்வோர் முறைப்பாடுகள்* ........ 15

*G.* *வளவுகளினுள் பிரவேசித்தல்* ........ 17

*H.* *ஏனையவை* ........ 20

*கணக்குக்கான மாற்றங்கள்* ........ 20

*சேவை வழங்கும் தரப்புடனான தொடர்பாடல்*........ 21

*மின்சாரத்தின் தரம்* ........ 22

*பாதுகாப்பு*........ 23

*ஏனைய கட்டணங்களுக்கான விதிப்பு*........ 23

*கவனிப்பில் சமத்துவம்*........ 24

*இரகசியத்தன்மை* ........ 24

***பாகம் III - மின்சார நுகர்வோர் கடமைகள்* ........ 24**

*A.* *ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளுதல்* ........ 24

*B.* *மின்சாரத் துண்டிப்பும் மின்சார மீளிணைப்பும்* ........ 26

*ஒரு வளவை விட்டுவெளியேறுதல்*.......... 26
*மின்சார மீளிணைப்பு* .......... 26
*C. பிணை சார்ந்த வைப்புத் தொகை* .......... 27
*D. மின்மானியும் மின்மானி வாசிப்பும்*.......... 27
*E. மின்சார நுகர்வுக் கட்டணங்களை அறவிடுதல்*.......... 28
*F. நுகர்வோர் முறைப்பாடுகள்* .......... 28
*G. வளவுகளுக்குள் பிரவேசித்தல்*.......... 28
*H. ஏனையவை* .......... 31
*கணக்குக்கான மாற்றங்கள்* .......... 31
*சேவை வழங்கும் தரப்புடனான தொடர்பாடல்*.......... 31
*மின்சாரத்தின் தரம்* .......... 31
*பாதுகாப்பு*.......... 32
***பாகம் IV - இறுதி ஏற்பாடுகள்*.......... 32**
*A. நடைமுறைக்கு வருதல்* .......... 32
*B. வெளியீடும் விளக்கங்களும்*.......... 33
***வரைவிலக்கணம்*.......... 34**

## *பாகம் I - பொதுவான ஏற்பாடுகள்*

### *A. அடிப்படை உரிமைகள்*

*மின்சார நுகர்வோருக்கு மின்சார விநியோகம் மற்றும் மின்சாரப் பாவனை தொடர்பான பின்வரும் அடிப்படை உரிமைகள் உண்டு.*

- *அறிவிக்கப்படுவதற்கான உரிமை (R1)*
- *சமத்துவமான முறையில் கவனிக்கப்படுவதற்கான உரிமை (R2)*
- *அடிப்படைத் தேவைகளில் திருப்திப்படுவதற்கான உரிமை (R3)*
- *நுகர்வோர் கல்விக்கான உரிமை (R4)*
- *தேர்ந்தெடுப்பதற்கான உரிமை (R5)*
- *செலவுகளை நியாயமான முறையில் அறவிடுவதற்கான உரிமை (R6)*
- *பரிகாரத்தை நாடுவதற்கான உரிமை (R7)*
- *ஆகக்குறைந்த நியம சேவையைப் பெறும் உரிமை (R8)*
- *தன்னிச்சையாக சாட்டப்படும் குற்றச்சாட்டுகளிலிருந்து நீங்கி சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை (R9)*
- *ஒரு பொது விசாரணையில் சட்டத்திற்கு அமைவாக குற்றம் நிறுபிக்கப்படும் வரை குற்றமற்றவராக இருப்பதற்கான உரிமை (R10)*
- *அந்தரங்கம், குடும்பம் அல்லது வளவுகள் என்பவற்றில் தன்னிச்சையான தலையீடின்றி சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை (R11)*
- *பாதுகாப்பும் ஆரோக்கியமும் உடைய ஒரு சுற்றாடலுக்கான உரிமை (R12)*
- *ஏதாவது பாதிப்பு அல்லது இடையூறு ஆகியன தொடர்பில் நஷ்டஈட்டைப் பெறுவதற்கான உரிமை (R13)*
- *இரசியத்தன்மையைப் பேணுவதற்கான உரிமை (R14)*

*குறித்த கூற்றை உள்ளடக்கிய இந்த ஆவணத்தின் II ஆம் பாகத்தின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மின்சார நுகர்வோர் உரிமைகளுக்கு எதிரே பொருத்தமான அடிப்படை உரிமையைப் பிரதிபலிக்கும் குறியீடு (உ-ம் R1) குறித்துக்காட்டப்பட்டுள்ளது.*

### *B. அடிப்படை கடமைகள்*

*மின்சார நுகர்வோருக்கு மின்சார விநியோகம் மற்றும் மின்சாரப் பாவனை தொடர்பான பின்வரும் அடிப்படை கடமைகள் உண்டு.*

- *ஒழுங்குபடுத்துகை வரையறைகளுக்கு அமைவாக செயல்படும் கடமை (O1)*
- *சேவை வழங்கும் தரப்பினால் சட்டமுறையாக விதிக்கப்படும் கட்டணங்கள் அனைத்தையும் செலுத்துவதற்கான கடமை (O2)*

- *திறமை வாய்ந்த சேவையை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு சேவை வழங்கும் தரப்புக்கு உதவுவதற்கான கடமை (O3)*
- *பெருமளவில் பொது மக்களினதும் ஏனைய மின்சார நுகர்வோரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான கடமை (O4)*
- *திறமை வாய்ந்த சேவையை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு சேவை வழங்கும் தரப்புக்கு தகவல்களை வழங்குவதற்கான கடமை (O5)*
- *சேவை வழங்கும் தரப்பினது சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான கடமை (O6)*
- *சரியான மின்சார நுகர்வினை பதிவு செய்வதை அனுமதிக்கும் கடமை (O7)*

*குறித்த கூற்றை உள்ளடக்கிய இந்த ஆவணத்தின் II ஆம் பாகத்தின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மின்சார நுகர்வோர் கடமைகளுக்கு எதிரே பொருத்தமான அடிப்படையான கடமையைப் பிரதிபலிக்கின்ற பொருத்தமான குறியீடு (உ-ம் O1) குறித்துக்காட்டப்பட்டுள்ளது.*

## *பாகம் II - மின்சார நுகர்வோர் உரிமைகள்*

### *A. ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளுதல்*

1. *மின்சார நுகர்வோருக்கு ஒரு புதிய மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொள்ளவதற்கு எடுக்கும் என மதிப்பிடப்பட்ட காலம் மற்றும் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் என்பன பற்றி அறிந்து கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு. (R1)*
2. *நுகர்வோருக்கு நிர்ப்பந்தம் அல்லது பாரபட்சம் இன்றி மின்சார விநியோகம் மற்றும் மின்சார இணைப்பு ஆகியவற்றை பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R2)*
3. *எவரேனும் நுகர்பவர் ஒருவர் ஏதாவது மின்சாரப் பகிர்ந்தளிப்பு மார்க்கத்தில் அல்லது மின்சாரம் விநியோகிக்கப்படுகின்ற ஒரு மின்சார மார்க்கத்தின் மூலம் மின்சாரம் இணைக்கப்படக்கூடிய அத்தகைய ஏதாவது மின்சார மார்க்கத்தில் இருந்து ஐம்பது (50) மீற்றர்கள் தூரத்தினுள் அமைந்துள்ள அவர் நிர்மாணித்த அவருக்குச் சொந்தமான அல்லது அவர் குடியிருக்கின்ற ஏதாவது வளவிற்கு ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வேண்டுகோளை விடுப்பதற்கு அவருக்கு **உரிமை** உண்டு. (R2)*
4. *நுகர்வோருக்கு ஒரு புதிய மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான விண்ணப்பப் படிவத்தை கட்டணமின்றி பெறுவதற்கும் **உரிமை** உண்டு. (R3)*
5. *நுகர்வோருக்கு புதிய ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளுவது தொடர்பில் விண்ணப்பப் படிவத்தை நிரப்புதல் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்தல் அடங்கலாக பௌதீக, நடைமுறை சார் தேவைப்பாடுகளைப்*

*பூர்த்தி செய்வது தொடர்பான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.* (R4)

6. *நுகர்வோருக்கு விண்ணப்பிக்கப்பட்ட மின்சார விநியோகக் கொள்ளளவு, வகுதி முதலியவற்றைப் பொறுத்து, உரிய முறையில் நிரப்பப்பட்ட ஒரு விண்ணப்பப் படிவம் எந்த நிலையத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.* (R4)
7. *ஒரு மின்சார விநியோகத்திற்கான வேண்டுகோளை (அதாவது விண்ணப்பத்தை சமர்பித்து) விடுத்து பத்து (10) அலுவலக நாட்களுக்குள் பின்வருவனவற்றைக் குறிப்பீடுசெய்கின்ற ஒரு அறிவித்தலைப் பெறுவதற்கு **உரிமை** உண்டு.*
   - (a) *மின்சார விநியோகத்திற்கான நுகர்பவரின் வேண்டுகோளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முன்மொழிவுகள் எந்தளவுக்கு சேவை வழங்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பது பற்றிய விபரங்கள்,*
   - (b) *சேவை வழங்கும் தரப்பினால் அளிக்கப்பட்ட பதில் முன்மொழிவுகள் (ஏதுமிருப்பின்),*
   - (c) *ஏற்புடைய இறுப்பு வகுதி,*
   - (d) *ஏதாவது ஒரு மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி தொடர்பில் ஒரு சேவை வழங்கும் தரப்பிற்கு நுகர்பவர் செலுத்த வேண்டிய கொடுப்பனவு (அதாவது செலவு மதிப்பீடு)[1],*
   - (e) *நுகர்பவர் செலுத்த வேண்டிய ஏதாவது பிணை சார்ந்த வைப்புத் தொகை, மற்றும்*
   - (f) *மின்சார நுகர்பவர் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்* (R1)
8. *நுகர்வோருக்கு ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள், ஏதாவது பிணை சார்ந்த வைப்புத் தொகை (கணிப்பீட்டு அடிப்படை அடங்கலாக) விபரங்களை அறிந்துகொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.* (R1)
9. *நுகர்வோருக்கு:*
   - (a) *ஒரு புதிய மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளும் நிமித்தம் சமர்ப்பித்த ஒரு விண்ணப்பத்தின் நிலை,*
   - (b) *அத்தகைய விண்ணப்பங்கள் படிமுறைப்படுத்தப்படாமை, நிராகரிக்கப் பட்டமை அல்லது படிமுறைப்படுத்துவதில் நிலவும் ஏதாவது தாமதம் என்பவற்றுக்கான காரணங்கள், மற்றும்*
   - (c) *அத்தகைய ஒரு விண்ணப்பத்தில் காணப்படும் ஏதாவது குறைபாட்டை நீக்குவதற்கு நுகர்வோரினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் முதலிய விடயங்களை அறிந்துகொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.* (R1)

---

[1]விதிவிலக்கு - மின்சாரத்தை தொகையாக அதிகளவு நுகர்பவர்கள் தொடர்பானது - இந்தத் தகவல்கள் இருபது (20) அலுவலக நாட்களுக்குள் வழங்கப்படும்

10. *நுகர்வோருக்கு ஒரு புதிய மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளும் போது, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை மாத்திரம் செலுத்துவதற்கு **உரிமை** உண்டு.* *(R2)*

11. *மின்சார விநியோக சேவைகள் சார்ந்த நியதிகளில் சேவை வழங்கும் தரப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கொள்ளளவுகளில் தேவையான மின்சார இணைப்புக் கொள்ளளவைத் தேர்ந்தெடுப்பதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.* *(R5)*

12. *சில்லறையாக மின்சாரத்தை நுகர்பவர்களுக்கு மின்சார விநியோகத்தை வழங்குவதற்கான உரிய கொடுப்பனவுத் தொகை செலுத்தப்பட்ட நாளில் இருந்து பத்து (10) அலுவலக நாட்களுக்குள் மின்சார இணைப்பையும் விநியோகத்தையும் பெற்றுக்கொள்வதற்கு **உரிமை** உண்டு.* *(R2)*

13. *தொகையாக அதிகளவில் மின்சாரத்தை நுகர்பவர்களுக்கு அந்த மின்சார விநியோகத்தை வழங்குவதற்கான உரிய கொடுப்பனவு சார்ந்த தொகை செலுத்தப்பட்ட நாளில் இருந்து நாற்பது (40) அலுவலக நாட்களுக்குள்[2] மின்சார இணைப்பையும் விநியோகத்தையும் பெற்றுக்கொள்ளுதவற்கு **உரிமை** உண்டு.* *(R2)*

14. *நுகர்வோருக்கு மின்சார விநியோகத்தை வழங்குவது தொடர்பில் சேவை வழங்கும் தரப்புடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பிரதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.**(R1)*

15. *மேலே காணப்படுகின்ற 13 ஆம் மற்றும் 14 ஆம் பந்திகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்த காலப்பகுதியினுள் சேவை வழங்கும் தரப்பினது கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை எனில், மின்சார நுகர்வோருக்கு:*
    - *(a) தமது விண்ணப்பத்தையும், சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்திய தமது கொடுப்பனவுகளையும் (அது வரை சேவை வழங்கும் தரப்பு செலவு செய்த செலவுகளைக் கழித்த பின்னர்) மீளப்பெற்றுக்கொள்ளுவதற்கும், மற்றும்*
    - *(b) அந்தத் தொகை செலுத்தப்பட்ட நாளுக்கும் மீளளிப்புச் செய்யப்படும் நாளுக்கும் இடையிலான காலம் தொண்ணூறு (90) நாட்களை அதிகரித்த பட்சத்தில், அந்தத் தொகை சேவை வழங்கும் தரப்பின் கைகளில் இருந்த காலத்திற்கு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்தில் (மின்சார விநியோக சேவைகள் சார்ந்த நியதிகளில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு) அந்த மீளளிக்கப்படும் தொகை மீதான வட்டியைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் **உரிமை** உண்டு.* *(R5)*

---

[2]விதிவிலக்கு – உரிமை A7 இல் குறிப்பிடப்பட வேண்டிய அறிவித்தலின் பிரகாரம், மின்சார விநியோகத்திற்குத் தேவையான காலம், ஆணைக்குழுவினால் விலை அனுமதிக்கப்படாத பொருட்கள், வேலையாட்கள் மற்றும் நிர்மான வேலைகளைக் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த

16. *நுகர்வோருக்கு:*

(a) *மின்சார விநியோகம் வழங்கப்பட்ட நாளில் இருந்து அறுபது (60) நாட்களுக்குள் தமது முதலாவது மின்சாரக் கட்டணப் பட்டியலைப் பெறுவதற்கு, அல்லது*

(b) *சேவை வழங்கும் தரப்பு அவ்வாறு செய்வதற்குத் தவறும் பட்சத்தில், வட்டியின்றி, நியாயமான மாதாந்தத் தவணைக்கட்டணங்களில், உரிய காலப்பகுதிக்கு (மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் விநியோகிக்கப் படாத) செலுத்த வேண்டிய அந்த மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தித் தீர்ப்பதற்கான ஒரு சலுகையைப் பெறுவதற்கு* ***உரிமை*** *உண்டு. (R6)*

17. *நுகர்வோருக்கு சேவை வழங்கும் தரப்புடன் ஒப்பந்தத்தை செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் குறித்த கூற்று அடங்கிய இந்த ஆவணத்தைப் பற்றி அறிந்து கொள்ளுவதற்கு* ***உரிமை*** *உண்டு. (R3)*

18. *பின்வரும் நோக்கங்களின் நிமித்தம், மின்சார விநியோக சார் நியதிகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிபந்தனைகளுக்கும் காலப் பகுதிகளுக்கும் அமைய ஒரு தற்காலிக மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொள்ள நுகர்வோருக்கு* ***உரிமை*** *உண்டு.*

(a) *திருமணம், மரணம் அல்லது சமய வைபவம் போன்ற ஒரு வீட்டு நிகழ்வு வைபவம் (ஏற்கெனவே இருந்த ஒரு மின்சார விநியோகத்தை நீடித்து தற்காலிக மின்சார விநியோகத்திற்காக விண்ணப்பிக்கப்படும் பட்சத்தில் அதற்கான வேண்டுகோள் விடுத்த நாள் வரை சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்த வேண்டிய சகல தொகைகளும் செலுத்தித் தீர்க்கப்படுதல் வேண்டும்)*

(b) *இன்னிசைக் காட்சி, கண்காட்சி அல்லது அரசியல் கூட்டம் போன்ற ஒரு பொது வைபவம்*

(c) *ஒரு வீட்டை, கட்டிடத்தை அல்லது ஒரு நிர்மாணத்தை நிர்மாணித்தல்*

(d) *அணைக்கட்டு, சுரங்கவழி அல்லது பாலம் போன்ற ஒரு உட்கட்டமைப்பு வசதியை நிர்மாணித்தல் (R3)*

## B. *மின்சாரத் துண்டிப்பும் மின்சார மீளிணைப்பும்*

### *மின்சாரத் துண்டிப்பு*

1. *கீழே குறிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர*[3], *மின்சார நுகர்வோருக்கு மின்சார விநியோகம் துண்டிக்கப்படாமலிருப்பதற்கு* ***உரிமை*** *உண்டு.*
   - (a) *மின்சார நுகர்வோர் வேண்டுகோள் விடுக்கும் சந்தர்ப்பம்*
   - (b) *சேவை வழங்கும் தரப்பிடமிருந்து ஒரு அறிவித்தல்*[4] *கிடைத்து ஏழு (07) நாட்களுக்குள் பிணை சார்ந்த ஒரு புதிய வைப்புத் தொகையை அல்லது நிலுவைத் தொகையை*[5] *செலுத்துவதற்கு (சராசரி மின்சார நுகர்வில் ஏற்படும் அதிகரிப்பின் விளைவாக தேவைப்படுத்தப்படும்) தவறும் சந்தர்ப்பம்*
   - (c) *மின்சார விநியோகம் அல்லது அந்த மின்சார விநியோகம் சார்ந்த நோக்கத்திற்கான ஏதாவது மாணிவாசிப்புக் கருவி, மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி தொடர்பில் சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்தப்பட வேண்டிய சகல கட்டணங்களையும், தேவையான காலப் பகுதியினுள் செலுத்தத் தவறும் சந்தர்ப்பம்*
   - (d) *சேவை வழங்கும் தரப்புடன் செய்துகொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் பிரகாரம், உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தத் தவணைக்கட்டணங்களை (சேவை வழங்கும் தரப்பு அத்தகைய வசதியை வழங்கியுள்ளவிடத்து) செலுத்தத் தவறும் சந்தர்ப்பம்*
   - (e) *மின்சார விநியோகத்திற்கு அல்லது எவரேனும் மின்சார நுகர்பவருக்கு வேண்டாத அல்லது முறையற்ற விதத்தில் பயன்படுத்தும் ஏதாவது மின் உபகரணங்களின் பாவனையை நிறுத்துமாறு மின்சார நுகருபவருக்கு சேவை வழங்கும் தரப்பினால் விநியோகிக்கப்படும் ஒரு அறிவித்தலுக்கு இயைந்தொழுகத் தவறும் சந்தர்ப்பம்*
   - (f) *குறித்த மின்சாரச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு தொடர்பாக குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பெருமளவில் பொது மக்களுக்கு அல்லது நுகர்பவரின் வளவினிலுள்ள எவருக்கும் உடற்காயங்களை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான அல்லது பாதுகாப்பற்ற விதத்தில் மின்சாரம் பாவிக்கப்படும் சந்தர்ப்பம்*
   - (g) *மின்பொறித்தொகுதியின், ஏதாவது மின்சார மார்க்கத்தின் மின்சார பழுதடைவுகளிலிருந்து எழுகின்ற ஒரு அவசர சந்தர்ப்பம்*
   - (h) *குறித்த மின்சாரச் சட்டத்தின் கீழ் மின்சார நுகர்பவர் ஒரு குற்றவாளியாக காணப்படும் சந்தர்ப்பம் (R2)*

---

[3] *(c), (d) மற்றும் (e) ஆகியவற்றின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் மின்சார நுகர்பவர் குடியிருக்கும் ஏதாவது வளாகங்களுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படலாம்.*

[4] *மேலும் விபரங்களுக்கு விடயம் 'C' ஐ பார்க்கவும்.*

[5] *நிலுவைத் தொகை = ஒரு இரண்டு (02) மாத காலத்திற்கான தற்போதைய சராசரி மின்சார நுகர்வு - [இருக்கின்ற பிணை சார்ந்த வைப்புத் தொகை + இருக்கின்ற அந்தப் பிணை வைப்புத் தொகை மீது ஒன்றுசேர்ந்த வட்டி]*

2. *மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (a) என்ற உப பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பம் தொடர்பில் சேவை வழங்கும் தரப்புடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கிணங்க ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நேரத்தில் மின்சார விநியோகத்தைத் துண்டித்துக் கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R5)*
3. *மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (c), (d) மற்றும் (e) ஆகிய உப பந்திகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் மின்சார நுகர்வோருக்கு பின்வரும் விடயங்கள் அடங்கிய ஆகக்குறைந்தது ஒரு பத்து (10) நாள் அறிவித்தலையாவது பெறுவதற்கு **உரிமை** உண்டு.*
   (a) *மின்சாரத் துண்டிப்புக்கான காரணங்கள்*
   (b) *மின்சார மீளிணைப்புக்காகப் பூர்த்திசெய்ய வேண்டிய தேவைப்பாடுகள், மற்றும்*
   (c) *மின்சார நுகர்பவர் தனது வளவுகளுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படுவதற்கு முன்னர் அந்த மின்சாரத் துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளுவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் (ஏதுமிருப்பின்) (R1)*
4. *மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (b), (c),(d) ஆகிய உப பந்திகளின் கீழ், செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் (சேவை வழங்கும் தரப்பிடமிருந்து கிடைக்கப்பெற்ற உரிய அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட) நியாயமான ஒரு பிணக்கு காணப்படும் எனில், மின்சார நுகர்வோருக்கு மின்சார விநியோகத்தைத் துண்டிக்காமல் வைத்துக் கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு. (R9)*
5. *நுகர்வோருக்கு மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (b), (c) மற்றும் (d) ஆகிய உப பந்திகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், பொது விடுமுறை நாட்களிலும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும், ஏனைய நாட்களில் மு.ப. 08.00 மணிக்கு முன்னரும் மற்றும் பி.ப. 05.00 மணிக்கு பின்னரும் மின்சார விநியோகத்தைத் துண்டிக்காமல் வைத்துக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு. (R3)*

***மின்சார மீளிணைப்பு***

6. *மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (b) என்ற உப பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் ஏதாவது வளவுக்கான மின்சார விகியோகத்தை சேவை வழங்கும் தரப்பு துண்டித்துள்ளவிடத்து, தேவைப் படுத்தப்பட்ட பிணை சார்ந்த வைப்புத் தொகையை அவர் செலுத்தி இரண்டு (02) அலுவலக நாட்களுக்குள் மின்சார நுகர்பவருக்கு அந்த மின்சார விநியோக மீளிணைப்பைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R2)*
7. *மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (c) மற்றும் (d) ஆகிய பந்திகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், ஏதாவது வளவுக்கான*

*மின்சார விநியோகத்தை சேவை வழங்கும் தரப்பு துண்டித்துள்ளவிடத்து, நுகர்வோர் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்ததன் பின் இரண்டு (02) அலுவலக நாட்களுக்குள் அந்த மின்சார விநியோக மீளிணைப்புப் பெற்றுக் கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.*

(a) *ஒரு பிணை சார்ந்த வைப்புத் தொகையை (தேவையெனில்) செலுத்தல்*

(b) *செலுத்தத் தவறியமையை சீர்செய்தல்*

(c) *மின்சாரத் துண்டிப்பு மற்றும் மின்சார விநியோக மீளிணைப்பு மீதான செலவுகளை (ஆணைக்குழு அங்கீகரித்த) செலுத்தல் (R2)*

8. *மேலே காணப்படும் 07 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மின்சார நுகர்வோரின் உரிமையைப் பாதுகாப்பதற்கு சேவை வழங்கும் தரப்பு தவறியதன் விளைவாக ஏற்படும் ஏதாவது நட்டத்திற்கு / பாதிப்புக்கு சேவை வழங்கும் தரப்பிடமிருந்து நஷ்டஈட்டைக் கோருவதற்கு எவருக்கும் **உரிமை** உண்டு. (R7)*

9. *மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (e) என்ற உப பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் ஏதுாவது வளவுக்கான மின்சார விநியோகத்தை சேவை வழங்கும் தரப்பு துண்டித்துள்ளவிடத்து, அந்த மின்சார நுகர்பவர் வேண்டாத அல்லது தகாத விதத்தில் மின் உபகரணங்களை பாவிப்பதில் இருந்து தவிர்த்தும் வேறு எவரேனும் மின்சார நுகர்பவருக்கான மின்சார விநியோகத்திற்கு இடையூறுகள் ஏற்படாதவாறு தவிர்த்ததன் பின்பு இரண்டு (02) அலுவலக நாட்களுக்குள் மின்சார மீளிணைப்பைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உரிமை உண்டு. (R2)*

10. *மேலே காணப்படும் 1 ஆம் பந்தியின் (f) அல்லது (g) என்ற உப பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சேவை வழங்கும் தரப்பு ஏதாவது வளவுக்கான மின்சார விநியோகத்தைத் துண்டித்துள்ளவிடத்து சேவை வழங்கும் தரப்பு மின்சார ஆபத்துக்களிலிருந்து பெருமளவில் பொது மக்களுக்கு அல்லது மின்சார நுகர்பவரின் வளவிலுள்ள நபர்களுக்கு பாதுகாப்பு இருக்கின்றது என திருப்தி அடைந்ததின் பின் சாத்தியமான விதத்தில் உடனடியாக மின்சார விநியோக மீளிணைப்பைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R2)*

## *C. பிணை சார்ந்த வைப்புத் தொகை*

1. *பிணை சார்ந்த ஒரு புதிய வைப்புத் தொகையை அல்லது ஒரு நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு (சராசரி மின்சார நுகர்வில் ஒரு அதிகரிப்பின் விளைவாக செலுத்தத் தேவைப்படுத்திய) ஆகக்குறைந்தது ஏழு (07) நாள் அறிவித்தலைப் பெறுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R1)*

2. *இரண்டு (02) மாத சராசரி மின்சாரப் பாவனைக்கு சமனான ஒரு தொகைக்கு மேலதிகமான பிணை சார்ந்த வைப்புத் தொகையை வழங்காதிருக்க நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R6)*

3. *மின்சார நுகர்வின் பேரில் செலுத்த வேண்டிய கட்டணங்களுக்கான ஒரு கட்டணம் செலுத்தும் அமைப்பில், பிணை சார்ந்த ஒரு வைப்புத் தொகையாக சேவை வழங்கும் தரப்புக்கு வழங்கப்பட்ட ஏதாவது தொகை மீது அத்தகைய வைப்புத் தொகை அந்த சேவை வழங்கும் தரப்பினது கையில் இருக்கும் காலத்திற்கு, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (மின்சார விநியோக சேவைகள் சார்ந்த நியதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு) பின்வரும் விதத்தில் வட்டியைப்*[6] *பெற்றுக்கொள்ளுவதற்கு* ***உரிமை*** *உண்டு.*
   (a) *சில்லறையாக மின்சாரத்தை நுகர்பவர்கள் - வருடாந்தம் (ஒவ்வொரு வருடத்திலும் திசம்பர் மாதத்தில்)*
   (b) *தொகையாக அதிகளவில் மின்சாரத்தை நுகர்பவர்கள் - மாதாந்தம் (ஒவ்வொரு மாத இறுதியிலும்)(R6)*
4. *சேவை வழங்கும் தரப்புடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் முடிவுறுத்தப் படும் பட்சத்தில் பிணை சார் வைப்புத் தொகையையும் அதற்குரிய ஏதாவது வட்டியையும் சேர்த்து மீளப்பெற்றுக்கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு* ***உரிமை*** *உண்டு. (R6)*
5. *ஒரு கணக்கு புதிய மின்சார நுகர்பவருக்கு மாற்றப்படும் பட்சத்தில், அந்தக் கணக்குக்கு மாற்றப்படும் தொகைக்கான ஏதாவது வட்டியையும் சேர்த்து பிணை சார்ந்த அந்த வைப்புத் தொகையைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஒரு மின்சார நுகர்பவருக்கு* ***உரிமை*** *உண்டு. (R6)*

## *D. மின்மானியும் மின்மானி வாசிப்பும்*

1. *நுகர்வோர் விரும்புகின்றவாறு எந்த நேரத்திலும் மின்மானி வாசிப்பை வாசித்து அறிந்து கொள்ளக்கூடியவாறு தனது வளவினுள் பாதுகாப்பான ஒரு இடத்தில் மின்மானியை பொருத்திக் கொள்ளுவதற்கு உரிமை உண்டு.(R1)*
2. *மின்மானியொன்றினால் உறுதி செய்யப்பட்ட மின் நுகர்வுக்கு கட்டணம் செலுத்த நுகர்வோருக்கு உரிமை உண்டு. அந்த மின்மானியானது*
   *(a) சேவை வழங்கும் தரப்பினால் வழங்கப்பட வேண்டும், மற்றும்*
   *(b) சேவை வழங்குநரின் சொந்தச் செலவில் ஒழுங்கான முறையில் பேணி வைத்திருத்தல் வேண்டும். (விநியோகித்த மின்சாரத்தின் அளவை சரியாகப் பதிவு செய்வதற்காக) (R9)*
3. *சேவை வழங்கும் தரப்புக்கு உரிய கொடுப்பனவு(ஆணைக்குழு அங்கீகரித்த) செலுத்தப்பட்டு பத்து (10) அலுவலக நாட்களுக்குள் குறித்த மானிவாசிப்புக் கருவியின் செவ்வைத் தன்மையை பரிசீலிக்கச் செய்யுமாறு கோர* ***உரிமை*** *உண்டு. எனினும், ஒரு சேவை வழங்கும் தரப்பு கீழே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளின் பிரகாரம், அந்த உரிய மானிவாசிப்புக்*

---

[6] *இந்த உரிமை 01-01-2016 இல் இருந்து அமுலில் இருக்கும்.*

கருவி சோதனையிடப் பட்டுப் பரிசீலிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்வதற்கு (மின்சார நுகர்பவருக்கு) தவறும் பட்சத்தில், கொடுப்பனவு எதனையும் செலுத்தத் தேவைப்படுத்தப்படமாட்டாது.

(a) குறைந்த மின் வோல்டேஜ்களை சில்லறையாக நுகர்கின்ற மின்சார நுகர்வோர் - தனி பேபிஸ்: சோதனையிடுமாறு கோரப்பட்ட நாளிலில் இருந்து கடந்த பத்து (10) வருட காலப்பகுதியில்

(b) குறைந்த அளவிலான மின் வோல்டேஜ்களை சில்லறையாக நுகரும் மின்சார நுகர்வோர் - த்றீ பேபிஸ்: சோதனையிடுமாறு கோரப்பட்ட நாளிலில் இருந்து கடந்த ஐந்து (05) வருட காலப்பகுதியில்

(c) குறைந்த அளவிலான மின் வோல்டேஜ்களை தொகையாக அதிகளவில் நுகரும் மின்சார நுகர்வோர் - சோதனையிடுமாறு கோரப்பட்ட நாளிலில் இருந்து கடந்த ஒரு (01) வருட காலப்பகுதியில்

(d) நடுத்தரளவான மின் வோல்டேஜ்களை நுகர்கின்ற மின்சார நுகர்வோர் - சோதனையிடுமாறு கோரப்பட்ட நாளிலில் இருந்து கடந்த ஒரு (01) வருட காலப்பகுதியில்

(e) நிலையாகப் பொருத்தப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகள் - ஆகக்கூடியது ஒரு (01) வருடம் என்ற வரையறைக்கு அமைய, சோதனையிடுமாறு கோரப்பட்ட நாளில் இருந்து ( நிலையாகப் பொருத்தப்பட்டுள்ள அந்த மின்பிறப்பாக்கிகளின் வலைக்கோவை உள்ளக மின்னிணைப்புக்கான இ.மி.ச. வழிகாட்டியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு) கடந்த ஒரு வருட காலப் பகுதியில் (R9)

4. ஒரு மின்சார நுகர்பவரினது வேண்டுகோளின் அல்லது சேவை வழங்கும் தரப்பினது முன்னெடுப்பில் ஒரு மின்மானியின் செவ்வையினை சோதனையிடப்படும் போது, நுகர்பவருக்கு அந்த மின்மானியின் சோதனை அறிக்கையின் ஒரு பிரதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R1)

5. செவ்வை தொடர்பான ஒரு மின்மானியின் சோதனையில் பின்பற்றப்பட்ட நடைமுறை மற்றும் மின்சார நுகர்வை மதிப்பிடுவதில் பிரயோகிக்கப்பட்டுள்ள முறையியல்கள் என்பன பற்றி சேவை வழங்கும் தரப்பிடம் இருந்து தேவையான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு உரிமை உண்டு. (R1)

6. சேவை வழங்கும் தரப்பு மின்சார நுகர்பவர் வேண்டுமென்றே அல்லது அலட்சியமாக:

   (a) சேவை வழங்கும் தரப்பு அந்த நுகர்வோரின் வளவுக்கு விநியோகித்த மின்சார அளவை அளவிடுகின்ற மின்மானியின் பதிவை மாற்றியுள்ளார்,

   (b) அந்த மின்மானியூடாக விநியோகித்த மின்சார அளவை சரியாகப் பதிவதிலிருந்து குறித்த மின்மானியை அவர் தடைப்படுத்தியுள்ளார், அல்லது

   (c) சேவை வழங்கும் தரப்புக்குச் சொந்தமான அல்லது அந்தத் தரப்பினால் இயக்கப்படும் ஏதாவது மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி

*என்பவற்றுக்கும் அதே நேரம் தன்னுடைய ஆதனத்தில் அமைந்துள்ள மின்மானி வரையான (மின்மானி அடங்கலாக) ஏதாவது மின்சார மார்க்கத்தினதும் மற்றும் மின்பொறித்தொகுதியினதும் பாகங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார் அல்லது பாதிப்பு ஏற்படக் காரணமாக இருந்துள்ளார் என சந்தேகிக்கும் பட்சத்தில், ஒரு நீதிவான் நீதிமன்ற விசாரணையின் பின்னர் அந்த நுகர்பவர் குறித்த மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றவாளியாகக் காணப்படும் வரையில், சேவை வழங்கும் தரப்புக்கு நட்டங்களை அல்லது பாதிப்புகளை ஏற்படுத்தினார் என சாட்டப்படும் ஏதாவது குற்றத்திற்காகத் தண்டிக்கப்படாமலிருக்க உரிமை உண்டு. (R10)*

7. *செவ்வை வரையறையானது +/- 2.5% ஐ (நுகர்பவரின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சோதனையின் பெறுபேறுகளினது அடிப்படையில்) மின்மானி தாண்டியிருக்கின்றது என நிரூபிக்கப்படுமானால்,*
   (a) *தனது மின்மானியை / மின்மானிகளை கட்டணம் ஏதுமின்றி இலவசமாக மாற்றி நிறுவிக் கொள்ளுவதற்கும்,*
   (b) *மின்மானியை சோதனையிடும் நிமித்தம் செலுத்தப்பட்ட கட்டணங்களை மீளப்பெற்றுக்கொள்ளுவதற்கும்,*
   (c) *சேவை வழங்கும் தரப்புக்கான வருமானம் சார்ந்த ஏதாவது நட்டத்திற்கு (மாணிவாசிப்புக் கருவியின் பதிவு குறைவாகப் பதியப்பட்டிருப்பின் அதாவது பாதகமான தவறு (-) > 2.5% ஆக இருக்கின்ற பட்சத்தில்) மறுபடி அறவிடப்படாமலிருப்பதற்கும்,*
   (d) *கீழே தரப்பட்டுள்ள காலப்பகுதி தொடர்பில் மின்சார நுகர்பவரிடம் இருந்து மேலதிகமாக (மின்மானிப் பதிவு கூடுதலாக பதியப்பட்டிருக்கும் அதாவது சாதகமான தவறு (+) > 2.5% ஆக காணப்படும் பட்சத்தில்) அறவிடப்பட்ட தொகையை மீளப்பெற்றுக் கொள்ளுவதற்கும், மின்சார நுகர்பவர்களுக்கு உரிமையுண்டு.*
      - *பதிவு தவறாக இருந்த காலம் - தவறான பதிவு காலத்தை சரியாக நிச்சயப்படுத்திக்கொள்ளக்கூடிய நேரத்தில்*
      - *அறிக்கையிடப்பட்ட நாள் வரையான காலம் அல்லது பன்னிரெண்டு (12) மாத மின்சாரக் கட்டண காலங்கள் (எது அதிகமானதோ) - தவறான பதிவு காலத்தை சரியாக நிச்சயப்படுத்திக்கொள்ள இயலாத நேரத்தில் (R8)*

8. *செவ்வை வரையறையானது +/- 2.5% ஐ (சேவை வழங்கும் தரப்பினால் தனது சொந்த முன்னெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சோதனையின் பெறுபேறுகளின் அடிப்படையில்) மின்மானி தாண்டி இருக்கின்றது என நிரூபிக்கப்படுமானால்,*
   (a) *தனது மின்மானியை / மின்மானிகளை கட்டணம் ஏதுமின்றி இலவசமாக மாற்றி நிறுவிக்கொள்ளுவதற்கும்,*

(b) சேவை வழங்கும் தரப்பினது வருமானம் சார்ந்த ஏதாவது நட்டத்திற்கு (மின்மானியின் பதிவு குறைவாகப் பதியப்பட்டிருப்பின் அதாவது பாதமான தவறு (-) > 2.5% ஆக காணப்படும் பட்சத்தில்) தவறு கண்டுபிடிக்கப்பட்ட நாளில் இருந்து ஆகக் கூடியது மூன்று (03) மாத மின்சாரக் கட்டண காலங்களுக்கு, மாத்திரம் மீண்டும் அறவிடப்படுவதற்கும்,

(c) தவறு கண்டுபிடிக்கப்பட்ட நாளில் இருந்து ஆகக் கூடியது மூன்று (03) மாத மின்சாரக் கட்டண காலங்களுக்கு செலுத்திய மேலதிக (மின்மானிக் கட்டணங்களை பதிவு கூடுதலாக பதியப்பட்டிருப்பின் அதாவது சாதகமான தவறு > 2.5% ஆக காணப்படும் பட்சத்தில்) மீளப் பெற்றுக்கொள்ளுவதற்கும் **உரிமைகள்** உண்டு.(R8)

## E. மின்சார நுகர்வுக் கட்டணங்களை அறவிடுதல்

### மின்சாரக் கட்டணம்

1. மின்சார நுகர்வோரிடம் சரியான ஒரு மின்மானி(கள்) இனால் (ஒரு மின்சார நுகர்பவரும் சேவை வழங்கும் ஒரு தரப்பும் இடையில் உடன்பட்டாலன்றி) உறுதிப்படுத்தப்பட்ட மின்சார நுகர்வுக்கான கட்டணத்தை மாத்திரம் அறவிடப்படுவதற்கு **உரிமை** உண்டு. (R6)
2. மின்சார நுகர்வோருக்கு ஒவ்வொரு முப்பது (30) நாட்கள் +/- மூன்று (3) (அதாவது - 27 முதல் 33 நாட்கள் காலம்) நாட்களுக்கு ஒரு முறை விநியோகிக்கப்படும் ஒரு மின்சாரக் கட்டணப் பட்டியலையும் அதே நேரம் மின்மானி வாசிப்புப் பதிவையும் உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு. (R8)
3. நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணப் பட்டியலில் பின்வரும் தகவல்களைப் பெறுவதற்கு **உரிமை** உண்டு.
   (a) கணக்கு இலக்கம்
   (b) உரிய பிராந்திய/கிளை அலுவலகம்
   (c) ஏற்புடைய வரித்தீர்வு வகுதி
   (d) மின்சாரக் கட்டணத்திற்கான காலம்
   (e) செலுத்த வேண்டிய மொத்தக் கட்டணங்கள் பற்றிய விபரம் - அதாவது:
      - கடந்த காலங்களிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற மேலதிகமான கொடுப்பனவுகள்
      - தற்போதைய மின்சாரக் கட்டண காலத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள்
      - ஏனைய ஏதாவது கட்டணங்கள்
   (f) இறுதி மின்சாரப்பட்டியல் தினத்திலிருந்து செலுத்திய கொடுப்பனவுகள்
   (g) செலுத்த வேண்டிய கட்டணங்களின் கொடுப்பனவுக்கான உரிய திகதி

*(h) மின்சாரக் கட்டணத்தை செலுத்தித் தீர்ப்பதற்குக் கிடைக்கக்கூடிய முறைகள்*

*(i) மின்சாரக் கட்டணப் பட்டியல் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு எவ்வாறு மற்றும் யாரை தொடர்புகொள்ள வேண்டும் என்ற விபரம்*

*(j) மின்சார விநியோகத்தின் ஏதாவது தடங்கள் பற்றி அறியப்படுத்துவதற்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்*

*(k) சேவை வழங்கும் தரப்பின் உரிய பிராந்திய/கிளை அலுவலகத்தின் அமைவிடம் மற்றும் திறந்திருக்கும் அலுவலக நேரம்*

*(l) மின்சாரப் பாவனை (kWh) பற்றிய விபரங்கள்:*

- *இறுதி மானி வாசிப்புப் பதிவை உறுதிப்படுத்திய திகதி மற்றும் அதற்குரிய மானி வாசிப்பு (kWh)*
- *மானி வாசிப்புப் பதிவை உறுதிப்படுத்திய தற்போதைய திகதியும் அதற்குரிய மானி வாசிப்பும் (kWh)*
- *தற்போதைய காலப்பகுதியில் பாவிக்கப்பட்ட மின்சாரத்தின் அளவு (kWh) (R1)*

4. *நுகர்வோருக்கு தற்போதைய மின்சாரக் கட்டண காலத்திற்கு செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணங்கள் எவ்வாறு கணிக்கப்பட்டுள்ளன என்பது பற்றி அறிந்துகொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R4)*
5. *நுகர்வோருக்கு தற்பொழுது அமுலில் இருக்கின்ற மின்சார வரித்தீர்வு அட்டவணை, அதற்கு எதிர்காலத்தில் வரவிருக்கின்ற திருத்தங்கள் என்பன பற்றி அறிந்து கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு. (R1)*
6. *நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணப் பட்டியலில் வழங்கப்பட்டுள்ள ஏதாவது தகவல் பற்றி அறிந்துகொள்ள சேவை வழங்கும் தரப்பிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R4)*

***மின்சாரப் பாவனை மதிப்பீடு***

7. *மின்சார நுகர்வோருக்கு சாதாரண வர்த்தக அளவில் சேவை வழங்கும் தரப்பினால் தயாரிக்கப்பட்ட மின்சாரப் பாவனை தொடர்பான ஏதாவது மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் (உ-ம்: மானி வாசிப்பாளரினால் பிரவேசிக்க முடியாத வளவு) அதே நேரம் தேவையாயின் அடுத்து வரும் மாணிவாசிப்பு அடிப்படையில் உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்கும் அல்லது திருத்திக் கொள்ளுவதற்கும் உரிமை உண்டு.(R6)*
8. *பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முறையியலில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு (மின்சார விநியோக சேவைகள் சார்ந்த நியதியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு) மாத்திரம் மதிப்பீடு செய்யப் பட்ட தமது மின்சாரப் பாவனையை பெற்றுக்கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.*

*(a) ஒரு மின்மானி மின்சார நுகர்வை தவறாகப் பதிகின்றது என நிரூபிக்கப்படும்போது*

*(b) மின்மானி சரியான முறையில் தொழிற்படாதிருக்கின்றபோது சந்தர்ப்பம் அல்லது*

*(c) மின்மானி வாசிப்புப் பதிவை எவரேனும் ஒரு நபர் மாற்றுகின்றபோது (R6)*

9. *மின்சார நுகர்வோருக்கு மின்சாரப் பாவனையை மதிப்பிடுவதில் சேவை வழங்கும் தரப்பினால் பின்பற்றப்படுகின்ற முறையியல்கள் பற்றிய விபரங்கள் மற்றும் விளக்கங்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R4)*

***கொடுப்பனவுகள்***

10. *நுகர்வோருக்கு ஏதாவது வட்டி அறவிடப்படாமல் அல்லது மின்சாரத் துண்டிப்புக்கான ஒரு அறிவித்தல் விநியோகிக்கப்டாமல் ஒரு மின்சாரக் கட்டண காலப்பகுதிக்கு செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணங்களை அந்த மின்சாரக் கட்டணப் பட்டியல் விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு (14) நாள் காலப்பகுதியில் செலுத்தித் தீர்க்கும் வகையில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R6)*

11. *ஆணைக்குழு அங்கீகரித்த வீதத்தில் அல்லாத ஏதாவது நிலுவைத் தொகை மீதான வட்டியை செலுத்தாமலிருப்பதற்கு மின்சார நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R6)*

12. *சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்திய சகல கொடுப்பனவுகள் தொடர்பான பின்வரும் விபரங்கள் (ஆகக்குறைந்தளவில்) அடங்கிய மின்சாரம் சார்ந்த விடயங்களை ஏற்றுக் கொண்டமைக்கான ஒரு அத்தாட்சியை பெறுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.*

    *(a) கொடுப்பனவு செலுத்தப்பட்ட திகதி*

    *(b) கணக்கு இலக்கம்*

    *(c) கொடுப்பனவு வகை (உ+ம்: பணம், கடன் அட்டை முதலியன)*

    *(d) செலுத்தப்பட்ட தொகை (R1)*

13. *மின்சார நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணங்களை செலுத்தித் தீர்ப்பதற்குக் கிடைக்கக்கூடிய வழி வகைகள் மற்றும் அந்த ஒவ்வொரு வழி வகையினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை பதிந்து கொள்வதற்கு எடுக்கும் காலம் என்பன பற்றிய விபரங்களையும் அறிந்துகொள்ளுவதற்கு உரிமை உண்டு. (R1)*

## *F. நுகர்வோர் முறைப்பாடுகள்*

1. *ஏதாவது முறைப்பாடுகளுக்கு (மின்சார விநியோகம் மற்றும் மின்சாரப் பாவனை சம்பந்தமான) மின்சார விநியோக சேவைகள் சார்ந்த நியதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் கையாளுகை தொடர்பான நடைமுறையினூடாக தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R7)*
2. *நுகர்வோருக்கு மின்சார விநியோகம் சார்ந்த ஏதாவது முறைப்பாட்டை எழுத்தில் (தபால், தொலநகல் அல்லது மின்னஞ்சல்) அல்லது வாய்மொழி மூலம்[7]*
   - *(a) இலங்கை மின்சார சபை சம்பதந்ப்பட்டது எனில் அந்தந்த பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தில், வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் அல்லது E-நகரத்தில்*
   - *(b) லங்கா இலெக்ட்ரிசிற்றி கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் சம்பந்தப்பட்டது எனில் அந்தந்த கிளை முகாமையாளர் அலுவலகத்தில் அல்லது வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு. (R7)*
3. *நுகர்வோருக்கு சேவை வழங்கும் தரப்புக்கு செய்யப்பட்ட (எழுத்தில் அல்லது வாய்மொழியாக) ஏதாவது முறைப்பாடு தொடர்பில் ஒரு குறிப்பு இலக்கத்தையும் அதே நேரம் அந்த முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான ஒரு அறிவித்தலை*
   - *(a) முறைப்பாடு தபால் அல்லது தொலைநகல் மூலம் செய்யப்பட்டால் - முறைப்பாடு செய்யப்பட்டு ஐந்து (05) அலுவலக நாட்களுக்குள், தபால் மூலமாகவும்*
   - *(b) முறைப்பாடு தபால், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் செய்யப்பட்டு அத்தகைய முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான ஒரு அறிவித்தல் தபால் மூலம் மின்சார நுகர்பவருக்குக் கிடைக்காத சந்தர்ப்பத்தில் முறைப்பாடு தொலைபேசியின் ஊடாக செய்யப்பட்டால், தொலைபேசி வாயிலாகவும்*
   - *(c) முறைப்பாடு மின்னஞ்சல் மூலம் செய்யப்பட்டால் - அந்த முறைப்பாடு செய்யப்பட்ட இரண்டு (02) அலுவலக நாட்களுக்குள் மின்னஞ்சல் மூலமாகவும்*
   - *(d) முறைப்பாடு சேவை வழங்கும் தரப்பினது ஒரு அலுவலகத்திற்கு வருகை தந்த போது செய்யப்பட்டிருப்பின் - அவராகவே*

   *பெற்றுக்கொள்வதற்கு உரிமை உண்டு.(R1)*

---

*[7] மின்சாரக் கட்டணப் பட்டியலில் அச்சிடப்பட்டுள்ள தொடர்புகொள்ள வேண்டிய இலக்கத்தினூடாக முறைப்பாடு செய்யப்படுதல் வேண்டும். மேலும் நியாயமான ஒரு காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப் படவில்லை எனும் பட்சத்தில் அந்தந்த பிராந்திய பொறியியலாளர் அல்லது கிளை முகாமையாளர் ஆகியோருக்கு முறையீடு செய்தல் வேண்டும்.*

4. *நுகர்வோருக்கு சேவை வழங்கும் தரப்பிடம் தம்மால் செய்யப்பட்ட ஏதாவது முறைபாட்டின் தற்போதைய நிலை பற்றி அறிந்துகொள்ளுவதற்கு **உரிமை** உண்டு. (R1)*
5. *சேவை வழங்கும் தரப்பின் குறித்த உத்தியோகத்தரிடம் செய்யப்பட்ட ஏதாவது முறைப்பாட்டிற்கு அந்த முறைப்பாடு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு பதினான்கு (14) நாள் காலப்பகுதிக்குள் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R7)*
6. *எனினும், ஒரு தீர்வை வழங்கும் பொருட்டு குறித்த உத்தியோகத்தரினால் அவரது உயர் அதிகாரிக்கு அறிவிக்க வேண்டியிருப்பின், (உ+ம்: இலங்கை மின்சார சபை சம்பந்தப்பட்டது எனின் - பிராந்திய பொறியியலாளர் அந்தப் பிரச்சினை விடயத்தைத் தீர்த்து வைக்கும் பொருட்டு அதனை பிரதிப் பொது முகாமையாளருக்கு அறிவிக்கத் தீர்மானிப்பார்), மின்சார நுகர்வோருக்கு:*
   (a) *அந்த முறைப்பாடு செய்யப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு (14) நாள் காலப்பகுதியினுள் அந்த விடயம் பற்றி அறிவிக்கப்படுவதற்கும் அதே நேரம்*
   (b) *அத்தகைய முறைப்பாடு செய்யப்பட்ட நாளிலிருந்து இருபத்தெட்டு (28) நாள் காலப்பகுதிக்குள் ஒரு தீர்வை[8] பெற்றுக்கொள்ளுவதற்கும் **உரிமை** உண்டு. (R7)*
7. *சேவை வழங்கும் தரப்பிடமிருந்து கிடைத்த தீர்வுக்கு நுகர்வோர் உடன்படாத பட்சத்தில், முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி அறிந்துகொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R1)*
8. *மின்சார விநியோகம் அல்லது மின்சாரப் பாவனை தொடர்பில் சேவை வழங்கும் தரப்புடன் எழும் ஏதாவது பிணக்கை[9] உரிய தரப்புகளினால் ஆணைக்குழுவினால் விவரித்த பிணக்குகள் தீர்த்தலுக்கான நீதிரீதிகள் மூலம் தீர்வுகளை காண முடியவில்லை எனும் பட்சத்தில் அப்பிணக்கை ஆணைக்குழுவினால் தீர்த்துத் தருமாறு கோருவதற்கு மின்சார நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R7)*

---

[8] *விதிவிலக்கு - பிரச்சினை விடயத்திற்கான தீர்வானது மின்கட்டமைப்பு அபிவிருத்தியில் தங்கியிருக்குமாயின், அந்த விடயமும் அந்த விடயத்தைத் தீர்ப்பதற்கு எடுக்கும் காலமும் பற்றி மின்சார நுகர்பவருக்கு அறியப்படுத்தப்படுதல் வேண்டும்.*

[9] *மின்சார நுகர்பவர் சேவை வழங்கும் தரப்பிடம் ஒரு முறைப்பாட்டை செய்து, அந்த சேவை வழங்கும் தரப்பினால் வழங்கப்பட்ட தீர்வுக்கு மின்சார நுகர்பவர் உடன்படாத நேரத்திலும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் சேவை வழங்கும் தரப்பு அந்தப் பிரச்சினை தொடர்பில் தீர்வுகாணவில்லை எனும் நேரத்திலும் மாத்திரமே மின்சார நுகர்பவருக்கும் சேவை வழங்கும் தரப்புக்கும் இடையில் ஒரு பிணக்கு ஏற்பட்டுள்ளது எனக் கருதப்படுகின்றது.*

## G. *வளவுகளினுள் பிரவேசித்தல்*

1. *குடியிருப்பாளர் தனது வளவினள், கீழே குறிப்பிடப்பட்ட மின்சார சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் தவிர்ந்த, வேறு எந்த நோக்கத்திற்காகவும் சேவை வழங்கும் தரப்பினரை பிரவேசிக்காமல் தடுப்பதற்கு உரிமையுண்டு.*
   (a) *நோக்கங்கள்:*
      i. *ஏற்கெனவே சட்டபூர்வ முறையில் நிறுவப்பட்டுள்ள ஒரு மின்பொறித் தொகுதிக்கு அல்லது ஏற்கெனவேயிருக்கின்ற ஏதாவது ஒரு மின்சார மார்க்கத்திற்கு பதிலாக அல்லது அவற்றுக்கு மேலதிகமாக ஒரு புதிய மின்சார மார்க்த்தை அல்லது ஒரு புதிய மின்பொறித் தொகுதியை நிறுவுதல், அல்லது*
      ii. *ஏற்கெனவேயிருக்கின்ற அத்தகைய ஏதாவது மின்சார மார்க்கத்தை அல்லது மின்பொறித் தொகுதியை பழுதுபார்த்தல் அல்லது மாற்றி அமைத்தல்*

   (b) *வழமையான பணி, அதாவது:*
      i. *சேவை வழங்கும் தரப்புக்கு சொந்தமாகவிருக்கின்ற அல்லது அந்தத் தரப்பு மூலம் இயக்கப்படுகின்ற ஏதாவது ஒரு மின்சார மார்க்கத்தை அல்லது மின்பொறித் தொகுதியை சோதனையிடுதல்,*
      ii. *சேவை வழங்கும் தரப்புக்கு சொந்தமாகவிருக்கின்ற அல்லது அந்தத் தரப்பு மூலம் இயக்கப்படுகின்ற ஏதாவது ஒரு மின்மானியின் பதிவை நிச்சயப்படுத்திக்கொள்ளுதல், அல்லது*
      iii. *ஏதாவது ஒரு மின்மானியை அகற்றுதல், மீள்நிறுவுதல் அல்லது சோதனையிடுதல் அல்லது மின்மானிகளுக்கு ஏதாவது பிரதியீடான மின்மானியை/தொடர்புடைய உபகரணங்களை நிறுவுதல்*

   (c) *மின்சார விநியோகத்தைத் துண்டித்தல் / மின்மானியை / தொடர்புடைய பயன்படுத்தப்பட்ட ஏதாவது மின்பொறித் தொகுதியை அகற்றுதல் / குறித்த மின்சார சட்டத்தின் II ஆம் அட்டவணையின் 4 (3) அல்லது 4 (4) ஆகிய பந்தியின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சேவை வழங்கும் தரப்பின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு அல்லது மின்சார விநியோக நிமித்தம்*
      i. *ஏதாவது வளாகத்திற்கான மின்சார விநியோகத்தைத் துண்டித்தல், அல்லது*
      ii. *மின்மானியை அகற்றுதல்*

      *ஆகிய நோக்கங்கள்*

   (d) *மின்சார விநியோகத்தைத் துண்டித்தல் அல்லது ஏதாவது மின்பொறித் தொகுதியை, மின்சார மார்க்கத்தை அல்லது மின்மானியை அகற்றுதல் ஆகிய நோக்கங்கள் தொடர்பாக:*
      i. *கீழே (f) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் தவிர, குறித்த மின்சார சட்டத்தின் ஏதாவது ஒரு சட்டஏற்பாட்டினால் அல்லது குறித்த சட்டத்திற்கு ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளினால் ஏதாவது வளவுக்கான மின்சார விநியோகத்தை துண்டிப்பதற்கு அல்லது*

அகற்றுவதற்கு சேவை வழங்கும் தரப்புக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ள பட்சத்தில்,

ii. சேவை வழங்கும் தரப்பினால் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு வளவினுள் குடியிருக்கின்ற ஒரு நபர் அத்தகைய ஒரு மின்சார விநியோகத்தை நிறுத்துமாறு கோரும் பட்சத்தில், அல்லது

iii. ஏற்கெனவே சேவை வழங்கும் தரப்பினால் மின்சாரம் விநியோகிக்கப் பட்டுள்ள ஏதாவது ஒரு வளவினுள் குடியிருப்பதற்குப் பிரவேசிக்கும் ஒரு நபர் அத்தகைய மின்சார விநியோகம் தேவையில்லை என அறிவிக்கும் பட்சத்தில்

(e) ஒரு மின்சார நுகர்பவர் ஏனைய மின்சார நுகர்பவருக்கு மின்சார விநியோகத்தை வேண்டாத அல்லது முறையற்ற விதத்தில் தடைப்படுத்தும் ஏதாவது மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு அறிவித்து சேவை வழங்கும் தரப்பின் மூலம் விடுக்கப்படுகின்ற அறிவித்தலை ஒரு மின்சார நுகர்பவர் அனுசரிக்கத் தவறும் பட்சத்தில், மின்சார விநியோகத்தைத் துண்டிக்கும் நோக்கத்திற்காக,

(f) ஒரு மின்சார நுகர்பவர்:

i. மின்சார விநியோகம் / அந்த மின்சார விநியோக நோக்கத்தின் நிமித்தம் ஏதாவது மின்மானியை, மின்சார மார்க்கத்தை அல்லது மின்பொறித் தொகுதியை நிர்மாணித்து வழங்குதல் தொடர்பில் சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்த வேண்டிய சகல கட்டணங்களையும் தேவையான காலப்பகுதியினுள் செலுத்துவதற்கு தவறுகின்ற,

ii. சேவை வழங்கும் தரப்புடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய சகல மாதாந்தத் தவணைக் கட்டணங்களையும் செலுத்துவதற்குத் தவறுகின்ற, அல்லது

iii. பிணை சார்பில் புதிய ஒரு வைப்புத் தொகையை வழங்குவதற்கு அல்லது நிலுவைத் தொகையை (சராசரி நுகர்வில் ஒரு அதிகரிப்பின் விளைவாக தேவைப்படுத்தப்பட்ட) செலுத்துவதற்கு தவறுகின்ற சந்தர்ப்பங்களில் மின்சாரத்தை துண்டிக்கும் நோக்கத்திற்காக,

(g) வளவினிலுள்ள மின்சாரத்தின் பாவனையிலிருந்து அந்த வளவில் வசிக்கின்ற எவருக்கும் அல்லது பொது மக்களுக்கு காயத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது ஆபத்தானதும் அல்லது பாதுகாப்பற்றதுமான ஒரு அவசரநிலை எழுகின்ற நேரத்தில் மின்சார விநியோகத்தைத் துண்டிக்கும் நோக்கத்திற்காக(R11)

2. ஏதாவது ஒரு வளவின் குடியிருப்பாளருக்கு (அல்லது, வளவில் குடியிருப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தில், உரிமையாளருக்கு):

(a) மேற்குறித்த 1 ஆம் பந்தியின் விடயம் (a) இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கான உத்தேச பிரவேசம் பற்றி மூன்று (03) நாள் அறிவித்தலொன்று விடுக்கப்படாத பட்சத்திலும்[10]

(b) மேற்குறித்த 1 ஆம் பந்தியின் (b), (c), (d) மற்றும் (e) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு ஏதாவது ஒரு நாளில் மு.ப. 08:00 மணிக்கு முன்னரான அல்லது பி.ப. 05:00 மணிக்கு பின்னரான நேரங்களில், மற்றும்

(c) மேற்குறித்த 1 ஆம் பந்தியின் விடயம் (f) இன் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்கங்களுக்கு பொது விடுமுறை, சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் மு.ப. 08:00 மணிக்கு முன்னரான அல்லது பி.ப. 05:00 மணிக்கு பின்னரான நேரங்களில் (R3 and R11)

சேவை வழங்கும் தரப்பு தனது வளாகத்தில் பிரவேசிப்பதை அனுமதிக்காமல் இருப்பதற்கு மின்சார நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.

3. மேற்குறித்த 2 ஆம் பந்தியின் விடயம் (a) இல் குறிப்பிட்டுள்ள ஏதாவது ஒரு அறிவித்தல்:
   (a) மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயல்களின் தன்மை மற்றும் அளவு என்பவற்றையும்
   (b) காணியில் குடியிருப்பாளர் குடியிருக்கும் படசத்தில், குடியிருப்பாளருக்கு வழங்க வேண்டிய விடயங்களையும்,
   (c) காணியில் குடியிருப்பாளர் குடியிருக்காத பட்சத்தில், அந்தக் காணியின் உரிமையாளருக்கு வழங்க வேண்டிய விடயங்களையும் முழுமையாகவும் சரியாகவும் எடுத்துரைக்க வேண்டும், அதே நேரம் அந்த அறிவித்தல்
   (d) காணியில் குடியிருப்பாளர் குடியிருக்காத மற்றும் சரியான விதத்தில் உரிமையாளரின் பெயரையும் முகவரியையும் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாத பட்சத்தில் அந்தக் காணியில் தெளிவாகத் தென்படக்கூடிய ஒரு இடத்தில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது
   (e) குறித்த காணி ஏதாவது பொது நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற அல்லது ஒதுக்கப்பட்டுள்ள பட்சத்தில், பொறுப்புடைய உத்தியோகத்தருக்கு அல்லது நபருக்கு அத்தகைய அறிவித்தலை வழங்க வேண்டும். (R1)

4. ஏதாவது ஒரு வளவின் குடியிருப்பாளருக்கு (அல்லது, வளவில் குடியிருப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தில், உரிமையாளருக்கு) அத்தகைய பிரவேசத்தை தான் அனுமதிப்பதற்கு முன்னர் சேவை வழங்கும் தரப்பினது எவரேனும் பிரதிநிதியிடமிருந்து அவரது ஆளடையாளத்தை நிறுபிக்குமாறும் அதே நேரம் அத்தகைய பிரவேசத்திற்கான அவரது

[10]விதிவிலக்கு - ஏதாவது மின்சார மார்க்கத்தின் அல்லது மின்பொறித்தொகுதியின் பிழைகளினால் ஒரு அவசரநிலை எழுகின்ற சந்தர்ப்பத்தில், அறிவித்தல் வழங்காமல் வளவினுள் பிரவேசிக்கலாம், ஆனால் கூடுமானளவு அத்தகைய அறிவித்தலை முன்கூட்டியே விடுத்தல் வேண்டும்.

*அதிகார சான்றிதழை வழங்குமாறும் கோருவதற்கு மின்சார நுர்வோருக்கு* ***உரிமை*** *உண்டு.(R12)*

5. *ஒரு சேவை வழங்கும் தரப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் எவர் மூலமாகவும் ஏற்படுத்தப்பட்ட பிரவேசத்தின் காரணமாக ஏற்பட்ட இடையூறுகள், ஊனமுறல் அல்லது பாதிப்பு தொடர்பில் (மின்சார உற்பத்தி அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு, மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு அல்லது அந்தப் பிரவேசத்திற்கு எழுத்தில் அதிகாரம் அளித்த சேவை வழங்கும் தரப்பு ஆகிய தரப்புகளிடமிருந்து) நியாயமான நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ள ஏதாவது வளவின் உரிமையாளருக்கு* ***உரிமை*** *உண்டு. (R13)*
6. *ஏதாவது காணியில் அல்லது அசையும் சொத்துக்களில் அக்கறையுடைய எவருக்கும், குறித்த மின்சார சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு வளவுக்கான அல்லது காணிக்கான பிரவேசத்தை மேற்கொள்ளுவதற்கு உரித்தளிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை பிரயோகிக்கப்பட்டதன் காரணமாக அந்த வளவுக்கு அல்லது காணிக்கு ஏற்பட்ட ஏதாவது பாதிப்பு தொடர்பில், மின்சார உற்பத்தி அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பிடமிருந்து, மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பிடமிருந்து அல்லது பிரவேசத்திற்கான அதிகாரத்தை பிரயோகித்துள்ள சேவை வழங்கும் தரப்பிடமிருந்து நஷ்டஈடுகளை அறவிட்டுக்கொள்ளுவதற்கு* ***உரிமை*** *உண்டு. (R13)*
7. *பாதுகாப்பு அல்லது ஏனைய காரணங்கள் நிமித்தம் தனது வளவிற்குள் பிரவேசிப்பதில் மேலதிக பாதுகாப்புகளை வழங்குமாறு கோருவதற்கு எவருக்கும்* ***உரிமை*** *உண்டு.(R12)*

## H. ஏனையவை

### கணக்குக்கான மாற்றங்கள்

1. *கணக்கு விபரங்களில் மாற்றங்களை (உ-ம்: தொடர்புகொள்ள வேண்டிய விபரங்கள், மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முறை மொழி முதலியன) செய்வதற்கு நுகர்வோருக்கு* ***உரிமை*** *உண்டு.(R2)*
2. *சேவை வழங்கும் தரப்பினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின் மற்றுமொரு மின்சார நுகர்பவருக்கு தற்போதிருக்கின்ற ஒரு மின்சார விநியோகத்தை மாற்றிக் கையளிக்க நுகர்வோருக்கு* ***உரிமை*** *உண்டு.(R2)*

3. *வரித்தீர்வு வகுதியை மாற்றும் பொருட்டு தாம் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்பன பற்றி அறிந்துகொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R1)*
4. *சேவை வழங்கும் தரப்பினால் விதிக்கப்பட்ட (மின்சார விநியோகம் சார்ந்த நியதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு) தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப் பட்டதன் பின் வரித்தீர்வு வகுதியை மாற்றிப் பெற்றுக்கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R2)*
5. *ஒரு வதிவிடத்தை, கட்டிடத்தை அல்லது ஒரு நிர்மாணத்தை நிர்மாணிக்கும் நிமித்தம் ஏற்கெனவே தற்காலிகமான ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுள்ள எவரேனும் ஒரு மின்சார நுகர்பவருக்கு, ஏற்புடைய வரித்தீர்வு வகுதியின் கீழ் (அந்த நிர்மாண விடயங்கள் நிறைவு பெற்றதன் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்) அத்தகைய தற்காலிக மின்சார விநியோகத்தை ஒரு நிரந்தர மின்சார விநியோகமாக மாற்றிப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R2)*

***சேவை வழங்கும் தரப்புடனான தொடர்பாடல்***

6. *சேவை வழங்கும் தரப்பினது தொடர்புகொள்ள வேண்டிய விபரங்கள் மற்றும் அந்த விபரங்கள் தொடர்பான மாற்றங்கள் என்பன பற்றி அறிந்து கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R1)*
7. *நுகர்வோருக்கு, மின்சார விநியோகத்தில் ஒரு தடங்கல் அல்லது ஒரு அவசரநிலை எழுகின்ற நேரத்தில் அது பற்றி சேவை வழங்கும் தரப்புக்கு அறியப்படுத்துவதற்கான ஒரு வசதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு **உரிமை** உண்டு.(R1)*
8. *கீழே குறிப்பீடுசெய்யப்பட்ட முறைகளில் ஒரு முறையில் இந்தப் பாகத்தின் A7, B1(b), B1(e), B3, C1 மற்றும் G2(a) ஆகிய பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிவித்தல்களை*
   *(a) ஆள் ரீதியாக:*
      i. *வழங்கப்படும் அந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ள வேண்டிய வளவில் குடியிருக்கும் ஒருவர் ஒரு சிறு பிள்ளையாக (அதாவது: 18 வயதுக்குக் குறைந்தவராக) இல்லாதிருத்தில், மற்றும்*
      ii. *அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் நாளானது அது கிடைக்கும் நாளாக கருதப்படும்*
   *(b) பதிவுத் தபால் மூலமாக:*

i. *தபால் அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்ட குறிப்பு இலக்கமும் பற்றுச்சீட்டும் அந்த அறிவித்தல் கிடைத்தலுக்கான ஒரு பெற்றுக் கொள்ளுதலாக கருதப்படும், மற்றும்*

ii. *அறிவித்தல் தபாலில் அனுப்பப்பட்ட திகதியின் பின் அடுத்த இரண்டாவது (2-வது) அலுவலக நாள் அந்த அறிவித்தல் கிடைத்த நாளாகக் கருதப்படும் பட்சத்திலும்*

*பெற்றுக்கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு. (R1)*

9. *நுகர்வோருக்கு தமது மின்சார விநியோகம் தொடர்பான ஏதாவது விடயம் தொர்பாக கலந்துரையாடும் அல்லது அந்த விடயம் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சேவை வழங்கும் தரப்பினது பொருத்தமான அதிகாரிகளினுடனான சந்திப்புகளை ஏற்பாடுசெய்து கொள்வதற்கு **உரிமை** உண்டு.(R1 and R4)*

***மின்சாரத்தின் தரம்***

10. *நுகர்வோருக்கு மற்றொரு நுகர்பவரினால் ஏதாவது மின் உபகரணங்கள் வேண்டாத அல்லது தகாத முறையில் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் ஏதாவது இடையூறுகள் நீங்கிய ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொள்ள **உரிமை** உண்டு.(R8)*
11. *மின்சார விநியோகத்தில் திட்டமிடப்பட்ட ஏதாவது தடங்கல்களை ஏற்படுத்தும்போது அந்த தடங்கல் பற்றி ஆகக்குறைந்தது இருபத்து நான்கு (24) மணித்தியால அறிவித்தலைப் பெற்றுக்கொள்ள நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R1)*
12. *மேலே காணப்படும் 11 ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யட்டுள்ள அறிவித்தல் தொடர்பில் ஏதாவது மாற்றம் இருப்பின் (அதாவது:- மின்சார விநியோக தடங்கல்களின் அல்லது மீள்இணைப்பின் நாள் மற்றும் நேரம்) அது பற்றி கூடுமான விரைவில் முன்கூட்டிய அறிவித்தலை பெற்றுக்கொள்ளுவதற்கு நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R1)*
13. *நுர்வோருக்கு மின்சார விநியோகத்தில் ஒரு தடங்கல் ஏற்பட்டுள்ள நேரத்தில் அந்த மின்சார விநியோகத்தை மீள்இணைப்பதற்கு எடுக்கும் நேரத்தை அறிந்து கொள்ள **உரிமை** உண்டு.(R1)*
14. *நுகர்வோருக்கு தரமான மின்சார வோல்டேஜ் மற்றும் மீடிறன் (frequency) ஆகியவற்றைக் கொண்ட ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ள **உரிமை** உண்டு.(R8)*

***பாதுகாப்பு***

15. *மின்னுற்பத்தி, மின்சார செலுத்துகை, மின்சார பகிர்ந்தளிப்பு, மின்சார விநியோகம் என்பவற்றிலிருந்து எழும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெற நுர்வோருக்கு **உரிமை** உண்டு.(R12)*
16. *மற்றொரு மின்சார நுகர்பவரின் பாதுகாப்பற்ற மின்சார பாவனையிலிருந்து எழுகின்ற ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெற நுர்வோருக்கு **உரிமை** உண்டு.(R12)*
17. *மின்சார ஆபத்துக்களை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளுவது என்பது பற்றி அறிந்துகொள்ள நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R4 and R12)*
18. *மின்சார விநியோகம் தொடர்பான ஏதாவது பாதுகாப்பற்ற நிலை பற்றி அறிவிக்கப்படும் போது நுகர்வோருக்கு சேவை வழங்கும் தரப்பின் மூலம் உடனடியான சரியான பரிகார நடவடிக்கையைப் பெற்றுக்கொள்ள **உரிமை** உண்டு.(R12)*

***ஏனைய கட்டணங்களுக்கான விதிப்பு***

19. *நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்படவுள்ள ஏதாவது சேவைகள் தொடர்பில் சேவை வழங்கும் தரப்பிடமிருந்து கிடைத்த சகல மதிப்பீடுகளினதும் விளக்கங்கள் / விபரங்களைப் பெற்றுக்கொள்ள **உரிமை** உண்டு.(R1)*
20. *ஒரு வளவினுள் குடியிருந்த/அந்த வளவு சொந்தமாக இருந்த முன்னைய மின்சார நுகர்பவரிடமிருந்து வரவேண்டிய ஏதாவது கட்டணங்களுக்கு பொறுப்புடையவராக இல்லாதிருக்க நுகர்வோருக்கு **உரிமை** உண்டு.(R9)*
21. *ஒரு மின்சார மார்க்கத்தை அல்லது ஒரு மின்பொறித்தொகுதியை வழங்கல் தொடர்பில் (தனக்கு ஒரு மின்சார விநியோகத்தை வழங்கும் நோக்கத்திற்கு பயன்படுத்திய) சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்தப்பட்ட தொகையில் பத்தில் ஒரு மடங்கு (1/10) எவரேனும் பிற மின்சார நுகர்பவருக்கு மின்சார விநியோகத்தை வழங்குவதற்காக சேவை வழங்கும் தரப்பு அதே மின்சார மார்க்கத்தை அல்லது மின்பொறித்தொகுதியை பயன்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மீளளிப்பைப் பெற்றுக்கொள்ள நுகர்வோருக்கு உரிமை உண்டு[11](R6)*

---

*[11]விதிவிலக்கு - 1. மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி நிறுவப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலம் கழிந்துள்ள, 2. அதே மின்சார மார்க்கத்தை அல்லது அதே மின்பொறித் தொகுதியை*

***கவனிப்பில் சமத்துவம்***

*22. பாதகமாக அல்லது தப்பெண்ணம் இன்றி ஒரே பிரிவில் அல்லது ஒரே தன்மையிலுள்ள ஏனைய மின்சார நுர்வோர் கவனிக்கப்படும் விதத்தில் சமத்துவமான முறையில் கவனிக்கப்படுவதற்கு நுகர்வோருக்கு* ***உரிமை*** *உண்டு.(R2)*

***இரகசியத்தன்மை***

*23. சேவை வழங்கும் தரப்பு நியாயாதிக்க சபை, ஆணைக்குழு அல்லது ஏதாவது பிற அரச நிறுவனம் தவிர ஏதேனும் ஒரு தரப்புக்கு எவரேனும் ஒரு நுகர்பவர் தொடர்பான (நுகர்வோர் கணக்கு, மின்சார நுகர்வு,கொடுப்பனவுகள் ஆகிய விபரங்கள் அடங்கலாக) தகவல்களை அந்நுகர்பவரின் விருப்பமின்றி வேறு ஏதாவது ஒரு தரப்புக்கு வெளிப்படுத்தாது அந்த விபரங்களை இரகசியமாகவும் மற்றும் அந்தரங்கமாகவும் பேணப்படுவதற்கான* ***உரிமை*** *நுகர்வோருக்கு உண்டு.(R14)*

***பாகம் III - மின்சார நுகர்வோர் கடமைகள்***

***A. ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளுதல்***

*1. பின்வருவன அடங்கலாக, ஒரு மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொள்ளுவது தொடர்பில், மின்சார சேவைகள் சார்ந்த நியதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய நுகர்வோருக்கு* ***கடமை*** *உண்டு.*

*(a) முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட ஒரு நியம விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல்*

*(b) மின்சார விநியோகத்திற்காக விண்ணப்பிக்கப்படுகின்ற வளவுகள் தொடர்பான உரித்துடமை அல்லது குடியிருப்பு நிலை பற்றி கண்டறியும் நிமித்தம் சட்டபூர்வமான மற்றும் உண்மையான (ஆதார ஆவணங்கள்) தகவல்களை வழங்குதல்*

*(c) அந்த மின்சார விநியோக நோக்கத்திற்கான தனது முன்னைய ஏதாவது மின்சார விநியோகம் அல்லது ஏதாவது மின்மானி, மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி என்பன தொடர்பில் செலுத்த வேண்டிய சகல கட்டணங்களையும் செலுத்தித்தீர்த்தல்*

---

*பயன்படுத்தி ஏனைய ஒன்பது (09) மின்சார நுகர்வோருக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ள, மற்றும் 3. ஏனைய எவரேனும் மின்சார நுகர்பவருக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி (கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளவற்றுக்கு) அதிதரப்படுத்தப்படுதல் வேண்டும் என்ற பட்சத்தில், மீளளிப்பு ஏதும் செய்யப்படமாட்டாது.*

(d) நேவை வழங்கம் தரப்பினர் குறிப்பீடு செய்யப்பட்ட நியமங்களின் பிரகாரம் உள்ளக மின்சார இணைப்பு நிறுவுகை விடயங்களைப் பூர்த்தி செய்தல், மற்றும்

(e) சகல கட்டணங்களையும் செலுத்துதல் (O1)

2. நியம விண்ணப்பப் படிவத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாததன் விளைவாக அந்த விண்ணப்பதாரர் சார்பில் அந்த மின்சார நுகர்பவரின் வளவுக்கு மேற்கொள்ளப்படும் ஏதாவது மேலதிகமான விஜயங்கள் தொடர்பில் சேவை வழங்கும் தரப்பினால் விதிக்கப்படும் மேலதிகமான கட்டணங்களை செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O2)

3. மின்சார விநியோக நோக்கத்திற்கான ஏதாவது மின்மானி, மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி என்பன தொடர்பில் சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்த வேண்டிய சகல கட்டணங்களையும் செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O2)

4. ஒரு மின்சார விநியோகத்தை வழங்கும் நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதாவது ஒரு மின்சார மார்க்கத்திற்காக அல்லது மின்பொறித்தொகுதிற்காக சேவை வழங்கும் தரப்புக்கு ஏற்பட்ட செலவுகளை செலுத்துவதற்கு சேவை வழங்கும் தரப்பினால் ஒரு வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ள பட்சத்தில் அந்த சேவை வழங்கும் தரப்புடன் உடன்பட்டவாறு உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தத் தவணைக்கட்டணங்களை செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O2)

5. எவரேனும் ஒரு நபரின் மூலமாக வேண்டுமென்றே அல்லது கவனயீனமாக புரியப்படும் செயல்களினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கப் படும் வகையில் மின்மானியை நிறுவுவதற்கு பொருத்தமான ஒரு இடத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை சேவை வழங்கும் தரப்புக்கு வழங்க நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O3)

6. தமது வளவுக்கான ஒரு மின்சார விநியோகத்தை வழங்கும் நோக்கத்திற்காக தேவைப்படும் ஒரு மின்சார மார்க்கத்தை மற்றும் / அல்லது மின்பொறித்தொகுதி ஆகியவற்றை தனது வளவில், வளவின் நிலத்தின் கீழால் அல்லது மேலால் நிறுவவும் மற்றும் நிறுவிப் பராமரிக்கவும் சேவை வழங்கும் தரப்பை அனுமதிக்க நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O3)

7. ஒரு தற்காலிக மின்சார விநியோகம் தொடர்பிலான மின்சார நிறுவுகை சேவை வழங்கும் தரப்பினால் குறிப்பீடுசெய்யப்பட்ட நியமங்களை அனுசரித்து பாதுகாப்பான முறையில் அமைந்திருக்கின்றதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் **கடமை** நுகர்வோருக்கு உண்டு.(O4)

**B.** ***மின்சாரத் துண்டிப்பும் மின்சார மீளிணைப்பும்***

***ஒரு வளவை விட்டுவெளியேறுதல்***

1. *தமக்கு சேவை வழங்கும் தரப்பினால் மின்சார விநியோகம் வழங்கப் பட்டுள்ள ஏதாவது ஒரு வளவை விட்டுவெளியேறுவதற்கு தாம் உத்தேசிக்கும் பட்சத்தில், அது பற்றி சேவை வழங்கும் தரப்புக்கு ஆகக்குறைந்தது இரண்டு (02) அலுவலக நாட்கள் அடங்கிய ஒரு அறிவித்தலை விடுக்க நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O5)*
2. *தமக்கு சேவை வழங்கும் தரப்பினால் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு வளவை விட்டுவெயேறுவதற்கு முன்னர் அந்த மின்சார விநியோக நோக்கத்திற்கான மின்சார விநியோகம் அல்லது ஏதாவது மின்மானி, மின்சார மார்க்கம் அல்லது மின்பொறித்தொகுதி ஆகியன தொடர்பில் தாம் செலுத்த வேண்டிய சகல கட்டணங்களையும் செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு. (O2)*
3. *தனக்கு சேவை வழங்கும் தரப்பினால் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு வளவை மேற்குறித்த 1 ஆம் பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட அந்த விதத்தில் ஒரு அறிவித்தலை விடுக்காமல் ஒரு மின்சார நுகர்பவர் அந்த வளவை விட்டுவெளியேறும் பட்சத்தில்,*
   (a) *வளவை விட்டுவெளியேறுவது தொடர்பில் சேவை வழங்குநருக்கு தான் அறிவித்தலை விடுத்த பின்னர் வரும் இரண்டாவது (2-வது) அலுவலக நாளுக்கும்*
   (b) *மாணிவாசிப்பு உறுதிசெய்யப்படுகின்ற அடுத்த நாளுக்கும்*
   (c) *அதனைத் தொடர்ந்து வளவின் ஏதாவது குடியிருப்பாளர் சேவை வழங்கும் தரப்பிடமிருந்து மின்சார விநியோகத்தை வழங்குமாறு கோருகின்ற நாளுக்கும்*

   *முற்பட்ட காலம் வரை சேர்ந்த சகல கட்டணங்களையும் செலுத்த **கடமை** உண்டு.(O2)*

***மின்சார மீளிணைப்பு***

4. *நுகர்பவரின் மூலம் ஏதாவது ஒரு கொடுப்பனவை செலுத்தத் தவறியதன் விளைவாக சேவை வழங்கும் தரப்பு ஏதாவது ஒரு வளவுக்கான மின்சார விநியோகத்தை துண்டித்துள்ள பட்சத்தில், அந்த நுகர்பவர் அந்த மின்சார விநியோகத்தை மீளப்பெற்றுக்கொள்ளும் நிமித்தம் பின்வரும் தேவைப்-பாடுகளை பூர்த்தி செய்ய அவருக்கு கடமை உண்டு.*
   (a) *பிணை சார்ந்த ஒரு வைப்புத் தொகையை (தேவையெனில்) வழங்குதல்*
   (b) *செலுத்தத் தவறியதை சரிசெய்துகொள்ளல்*
   (c) *மின்சார விநியோகத் துண்டிப்பு மற்றும் மின்சார மீளிணைப்பு ஆகியன தொடர்பில் ஏற்பட்ட செலவுகளை (ஆணைக்குழு அங்கீகரித்த) செலுத்தல்(O1)*

## C. பிணை சார்ந்த வைப்புத் தொகை

1. சேவை வழங்கும் தரப்பிடமிருந்து ஒரு அறிவித்தல் கிடைத்து ஏழு (07) நாட்களுக்குள் பிணை சார்ந்த ஒரு புதியை வைப்புத் தொகையை அல்லது நிலுவைத் தொகையை (சராசரி மின்சார நுகர்வில் ஒரு அதிகரிப்பின் விளைவாக தேவைப்பட்டுள்ள) செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு. (O1)

## D. மின்மானியும் மின்மானி வாசிப்பும்

1. தமது வளவினுள் மின்மானியை(களை) நிறுவுவதற்கும் அதே நேரம் மாணிவாசிப்பாளர் அந்த மின்மானியை இலகுவாக அணுவதற்குமான பாதுகாப்பு வாய்ந்த ஒரு இடத்தை வழங்க நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O3)
2. மாணிவாசிப்பு மற்றும் மாணிவாசிப்புத் திகதி என்பவற்றை உறுதிசெய்து கொள்ளுவதற்கும் அதே நேரம் ஏதாவது வித்தியாசம் காணப்படுமாயின் அந்த வித்தியாசம் பற்றி கூடுமான விரைவில் சேவை வழங்கும் தரப்புக்கு அறிவிப்பதற்கும் நுகர்வோருக்கு **கடமை** உண்டு. (O3)
3. சேவை வழங்கும் தரப்புக்கு சொந்தமான அல்லது அந்தத் தரப்பின் மூலம் இயக்கப்படுகின்ற ஏதாவது ஒரு மின்சார மார்க்கத்திற்கு, மாணிவாசிப்புக் கருவிக்கு அல்லது மின்பொறித்தொகுதிக்கு ஏதாவது ஒரு நிகழ்வு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள (அல்லது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என சந்தேகிக்கப் படும்) சந்தர்ப்பத்தில் அது பற்றி உடனடியாக சேவை வழங்கும் தரப்புக்கு அறியப்படுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O6)
4. வேண்டுமென்றோ அல்லது கவனயீனமாகவோ:
   (a) தமது வளாகத்திற்கு சேவை வழங்கும் தரப்பினால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் அளவை அளவிடுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்ற மாணிவாசிப்பு பதிவை மாற்றாமலிருப்பதற்கும்
   (b) அந்த மின்மானியினூடாக விநியோகிக்கப்படும் மின்சார அளவை சரியாகப் பதிவதிலிருந்து அத்தகைய மின்மானியை தடுத்து நிறுத்தாமலிருப்பதற்கும்,
   (c) நுகர்வோரின் ஆதனத்தில் அமைந்துள்ள சேவை வழங்கும் தரப்புக்கு சொந்தமான அல்லது அந்தத் தரப்பின் மூலம் இயக்கப்படுகின்ற ஏதாவது ஒரு மின்சார மார்க்கத்திற்கு அல்லது மின்மானி வரையிலான (மின்மானி அடங்கலாக) மின்பொறித்தொகுதிக்கு அல்லது அதன் ஏதாவது பாகங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல், ஏற்படுவதற்கு காரணமாக அமையாமல் இருப்பதற்கு நுகர்வோருக்கு **கடமை** உண்டு. (O6, O7)

## E. மின்சார நுகர்வுக் கட்டணங்களை அறவிடுதல்

1. ஏதாவது ஒரு வட்டி அறவிடுவதை அல்லது ஒரு மின்சாரத் துண்டிப்பு பற்றிய அறிவித்தல் விடுக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ளும் முகமாக நிலுவையாக இருக்கின்ற ஏதாவது தொகையை மின்சாரம் சார்ந்த கட்டணப்பட்டியல் வினியோகிக்கப்பட்ட நாளிலிருந்து பதினைந்து (15) நாள் காலப்பகுதியினுள் செலுத்தித்தீர்ப்பதற்கு சில்லறையாக மின்சாரத்தை நுகரும் நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O2)

2. ஏதாவது ஒரு வட்டி அறவிடுவதை அல்லது ஒரு மின்சாரத் துண்டிப்பு பற்றிய அறிவித்தல் விடுக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ளும் முகமாக நிலுவையாக இருக்கின்ற ஏதாவது தொகையை மின்சாரம் சார்ந்த கட்டணப்பட்டியல் வினியோகிக்கப்பட்ட நாளிலிருந்து பதினைந்து (15) நாள் காலப் பகுதியினுள் செலுத்தித்தீர்ப்பதற்கு தொகையாக மின்சாரத்தை நுகரும் நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O2)

3. நிலுவையாக இருக்கின்ற ஏதாவது தொகையை மேலே காணப்படும் 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்திகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் செலுத்தித்தீர்ப்பதற்குத் தவறும் பட்சத்தில், ஆணைக்குழு அங்கீகரித்த அந்த நிலுவைத் தொகை மீதான வட்டியை செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O2)

4. செலுத்த வேண்டிய கட்டணங்கள் தொடர்பில் சேவை வழங்கும் தரப்புடன் உண்மையான ஒரு பிணக்கு ஏற்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில், அந்த பிணக்கிலுள்ள தொகையைத் தவிர, சேவை வழங்கும் தரப்புக்கான ஏனைய மின்சார நுகர்வு சார்ந்த சகல கட்டணங்களையும் செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு. (O2)

5. மின்சார விநியோகம் தொடர்பில் சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்த வேண்டிய ஏனைய சகல கட்டணங்களையும் குறித்த காலப் பகுதியினுள் செலுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O2)

## F. நுகர்வோர் முறைப்பாடுகள்

1. நுகர்வோர் தாம் சேவை வழங்கும் தரப்புக்கு செய்துள்ள ஏதாவது ஒரு முறைப்பாடு தொடர்பான கடிதத் தொடர்பிற்கான ஆதாரத்தை அந்த சேவை வழங்கும் தரப்புக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டி ஏற்படுமாயின் பட்சத்தில் அதை தம்மிடம் வைத்துக்கொள்ள நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O3)

## G. வளவுகளுக்குள் பிரவேசித்தல்

1. ஏதாவது ஒரு வளவின் குடியிருப்பாளருக்கு (அல்லது அந்த வளாகத்தில் குடியிருப்பாளர் இல்லாத பட்சத்தில், வளவின் உரிமையாளருக்கு) (a)

*கீழ்காணும் நோக்கங்களுக்காக உத்தேச பிரவேசம் பற்றிய ஒரு மூன்று (03) நாள் முன்னறிவித்தல் சேவை வழங்கும் தரப்பினால் வழங்கப்பட்டுள்ளபோது:*

i. *ஏற்கெனவே சட்டபூர்வ முறையில் நிறுவப்பட்டுள்ள ஒரு மின்பொறித் தொகுதிக்கு அல்லது ஏற்கெனவேயிருக்கின்ற ஏதாவது ஒரு மின்சார மார்க்கத்திற்கு அல்லது அவற்றுக்கு மேலதிகமாக ஒரு புதிய மின் பொறித்தொகுதியை நிறுவுவதற்கு அல்லது*

ii. *ஏற்கெனவேயிருக்கின்ற ஏதாவது மின்சார மார்க்கத்தை அல்லது மின் பொறித்தொகுதியை பழுதுபார்த்தல் அல்லது மாற்றி அமைத்தல் (O3)*

(b) *ஏதாவது ஒரு நாளில், வழமையான பணிக்காக மு.ப. 08:00 மணிக்கு பின்னர் அல்லது பி.ப. 05:00 மணிக்கு முன்னர்,*

i. *சேவை வழங்கும் தரப்புக்கு சொந்தமாகவிருக்கின்ற அல்லது அந்தத் தரப்பு மூலம் இயக்கப்படுகின்ற ஏதாவது ஒரு மின்சார மார்க்கத்தை அல்லது மின் பொறித்தொகுதியை சோதனையிடுவதற்கு*

ii. *சேவை வழங்கும் தரப்புக்கு சொந்தமாகவிருக்கின்ற அல்லது அந்தத் தரப்பு மூலம் இயக்கப்படுகின்ற ஏதாவது ஒரு மின்மானியின் பதிவை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு அல்லது*

iii. *ஏதாவது ஒரு மின்மானியை அகற்றுவதற்கு, மீளநிறுவுவதற்கு அல்லது சோதனையிடுவதற்கு அல்லது மின்மானிகளுக்கு ஏதாவது பிரதியீடான மின்மானிகளை/ அது தொடர்பான உபகரணங்களை நிறுவுவதற்கு(O3)*

(c) *குறித்த மின்சார சட்டத்தின் II ஆம் அட்டவணையின் 4 (3) அல்லது 4 (4) ஆம் பந்தியின் மூலம் சேவை வழங்கும் தரப்புக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ள*

i. *ஏதாவது வளவுக்கான மின்சார விநியோகத்தைத் துண்டிக்க அல்லது*

ii. *மின்மானியை அகற்ற(O3)*

*ஏதாவது ஒரு நாளில் மு.ப. 08:00 மணிக்கு பின்னர் அல்லது பி.ப. 05:00 மணிக்கு முன்னர் மின்சார விநியோகத்திற்கு அல்லது மின்சார பகிர்ந்தளிப்புக்கு மின்சாரத்தை இணைக்கும் நோக்கம் அல்லது அத்தகைய நோக்கங்களுக்கு பயன்படுத்திய ஏதாவது ஒரு மின்மானியை அல்லது மின் பொறித்தொகுதியை அகற்றுதல் அல்லது மின்சார விநியோகத்தை துண்டிப்பதற்கு*

(d) *ஏதாவது ஒரு நாளில் மு.ப. 08:00 மணிக்கு பின்னர் அல்லது பி.ப. 05:00 மணிக்கு பின்னர் மின்சார விநியோகத்தைத் துண்டித்தல், ஏதாவது மின் பொறித்தொகுதியை அல்லது ஏதாவது மின்சார மார்க்கத்தை, அல்லது மின்மானியை அகற்ற*

i. *கீழே (f) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் தவிர, குறித்த மின்சார சட்டத்தின் ஏதாவது ஒரு சட்டஏற்பாட்டினால் அல்லது குறித்த சட்டத்திற்கு ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளினால் ஏதாவது வளவிற்கான மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்கு அல்லது*

*வெட்டிவிடுவதற்கு சேவை வழங்கும் தரப்புக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ள பட்சத்தில்*

ii. *சேவை வழங்கும் தரப்பினால் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு வளவில் குடியிருக்கின்ற ஒரு நபர் அத்தகைய ஒரு மின்சார விநியோகத்தை நிறுத்துமாறு கோரும் பட்சத்தில் அல்லது*

iii. *ஏற்கெனவே சேவை வழங்கும் தரப்பினால் மின்சாரம் விநியோகிக்கப் பட்டுள்ள ஏதாவது வளவில் குடியிருப்பதற்கு பிரவேசிக்கும் ஒரு நபர் அத்தகைய மின்சார விநியோகம் தேவையில்லை என அறியத் தரும் பட்சத்தில் (O3)*

(e) *எவரேனும் ஏனைய மின்சார நுகர்பவருக்கு மின்சார விநியோகத்தை வேண்டாத அல்லது முறையற்ற விதத்தில் தடைப்படுத்தும் ஏதாவது மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு அறிவித்து சேவை வழங்கும் தரப்பு மூலம் விடுக்கப்பட்ட அறிவித்தலை ஒரு மின்சார நுகர்பவர் அனுசரிக்கத் தவறும் பட்சத்தில், ஏதாவது ஒரு நாளில் மு.ப. 08.00 மணிக்கு பின்னர் அல்லது பி.ப. 05:00 மணிக்கு முன்னர் அந்த மின்சார விநியோகத்தைத் துண்டிக்க*

(f) *ஒரு மின்சார நுகர்பவர்:*

i. *மின்சார விநியோகம் அல்லது அந்த மின்சார விநயோக நோக்கத்தின் நிமித்தம் ஏதாவது மின்மானியை, மின்சார மார்க்கத்தை அல்லது மின் பொறித்தொகுதியை வழங்குதல் தொடர்பில் சேவை வழங்கும் தரப்புக்கு செலுத்த வேண்டிய சகல கட்டணங்களையும் செலுத்தத் தவறும்*

ii. *சேவை வழங்கும் தரப்புடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தத்தின் கீழ் மாதாமாதம் செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்தத் தவறும் அல்லது*

iii. *பிணை சார்பில் ஒரு புதிய வைப்புத் தொகையை வழங்குவதற்கு அல்லது நிலுவைத் தொகையை (சராசரி நுகர்வில் ஒரு அதிகரிப்பின் விளைவாக தேவைப்படுத்தப்பட்ட) செலுத்தத் தவறும் பட்சத்தில் (O3)*

*பொது விடுமுறை நாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்கள் தவிர, ஏதாவது ஒரு நாளில் மு.ப. 08.00 மணிக்கு பின்னர் அல்லது பி.ப. 05:00 மணிக்கு மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்கு*

(g) *வளவிலுள்ள மின்சாரத்தின் பாவனையினால் அந்த வளவில் வசிக்கின்ற எவருக்கும் அல்லது பொது மக்களுக்கு காயத்தை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான அல்லது பாதுகாப்பற்ற ஒரு அவசரநிலை எழுகின்ற நேரத்தில் மின்சாரத்தைத் துண்டிப்பதற்கு (O4)*

*தனது வளவினுள் சேவை வழங்கும் தரப்பு பிரவேசிப்பதை அனுமதிக்க **கடமை** உண்டு.*

## *H. ஏனையவை*

***கணக்குக்கான மாற்றங்கள்***

1. *சட்டபூர்வமான மற்றும் உண்மையான தகவல்களை (வரித்தீர்வு வகுதியை அல்லது ஒரு கணக்கை மாற்றும் நிமித்தம் தேவையான ஆதார ஆவணங்கள்) வழங்குவது அடங்கலாக சேவை வழங்கும் தரப்பினால் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நுகர்வோருக்கு கடமை உண்டு.(O3, O5)*

***சேவை வழங்கும் தரப்புடனான தொடர்பாடல்***

2. *சேவை வழங்கும் தரப்பு தொடர்புகொள்ள வேண்டிய விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அந்த மாற்றங்கள் பற்றி அந்த சேவை வழங்கும் தரப்புக்கு அறியப்படுத்த நுகர்வோருக்கு **கடமை** உண்டு. (O5)*
3. *கீழே குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள முறைகளில் ஒரு முறையில் B1 என்ற பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள சேவை வழங்கும் தரப்புக்கான ஒரு அறிவித்தலை விடுக்க நுகர்வோருக்கு கடமை உண்டு.*
   (a) *ஆள் மூலமாக:*
      i. *வழங்கப்படும் அந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ள வேண்டியவர் சேவை வழங்கும் தரப்பினது ஒரு அலுவலராக இருத்தல் வேண்டும், மற்றும்*
      ii. *அறிவித்தலை ஏற்கொள்ளும் நாளானது அது கிடைக்கும் நாளாக கருதப்படும்*

   (b) *பதிவுத் தபால் மூலமாக:*
      i. *தபால் அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்ட குறிப்பு இலக்கமும் பற்றுச்சீட்டும் அந்த அறிவித்தல் கிடைத்தலுக்கான ஒரு ஏற்கையாகக் கருதப்படும்*
      ii. *அறிவித்தல் தபாலில் அனுப்பப்பட்ட நாளின் பின்னர் வருகின்ற இரண்டாவது (2-வது) அலுவலக நாள் அந்த அறிவித்தல் கிடைத்த நாளாகக் கருதப்படும்*

***மின்சாரத்தின் தரம்***

4. *மற்றொரு நுகர்பவரின் மின் பாவனையை தடைப்படுத்தும் மின் உபகரணங்களை பயன்படுத்தாது தவிர்த்துக்கொள்ள நுகர்வோருக்கு **கடமை** உண்டு. (O3)*
5. *எவரேனும் பிற மின்சார நுகர்பவருக்கான மின்சார விநியோகத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்துகின்ற வேண்டாத அல்லது தகாத முறையில் பயன்படுத்துகின்ற ஏதாவது மின் உபகரணத்தின் பாவனையை நிறுத்தக் கோரி சேவை வழங்கும் தரப்பினால் விடுக்கப்படும் ஏதாவது அறிவித்தலை அனுசரித்து நடக்க நுகர்வோருக்கு **கடமை** உண்டு.(O3)*

*பாதுகாப்பு*

6. *குறித்த மின்சார சட்டத்தின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான ஒழுங்குவிதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு பெருமளவில் பொது மக்களுக்கு அல்லது நுகர்பவரின் வளவிலுள்ள நபர்களுக்கு காயங்களை ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்பற்ற அல்லது ஆபத்தான மின்சாரப் பாவனையிலிருந்து ஏற்படும் ஆபத்துக்களில் இருந்து தவிர்ந்திருக்க நுகர்வோருக்கு* ***கடமை*** *உண்டு.(O4)*
7. *நிலத்திற்கு மேலால் உள்ள ஒரு மின்சார மார்க்கத்தை அனுகக்கூடிய முறையில் ஏதாவது கட்டிடம், நிர்மாணம் அல்லது மச்சு (அது நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக இருந்தாலென்ன) போன்றவை நிர்மானிக்கப்படுவதை அவதானித்தால் சேவை வழங்கும் அந்த உரிய தரப்புக்கு எழுத்தில் அறிவிக்க நுகர்வோருக்கு* ***கடமை*** *உண்டு.(O4)*
8. *மேலே காணப்படும் 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில், அத்தகைய நிர்மாணத்தின் போது அல்லது திருத்தத்தின் போது அல்லது அத்தகைய நிர்மாணத்தின் பின்னர் அல்லது திருத்தத்தின் பின்னர் மின்சார மார்க்கங்களுக்கு அல்லது நபர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்பதால் நிலத்திற்கு மேலால் உள்ள அந்த மின்சார மார்க்கம் அவ்வளவு பொருத்தமானதாக அமையாது என்றிருக்கும் பட்சத்தில், சேவை வழங்கும் உரிய தரப்பு அது பற்றி உறுதிப்படுத்தும் வரை அத்தகைய ஒரு கட்டிடத்தின் நிர்மாணத்தின் அல்லது மச்சின் நிர்மாணம் சார்ந்த அல்லது திருத்துதல் சார்ந்த பணியை ஆரம்பிக்காதிருக்க நுகர்வோருக்கு* ***கடமை*** *உண்டு.(O4)*
9. *மின்சார விநியோக கம்பித்தொகுதிக்கு (தமது வளவிற்கு மின்சாரத்தை விநியோகிக்கும் முகமாக சேவை வழங்கும் தரப்பினால் நிறுவப்பட்டுள்ள மின்சார மார்க்கம்) அருகில் நீண்டு வளர்ந்த தடையை ஏற்படுத்தக்கூடிய அல்லது அந்த மின்சார விநியோக கம்பித்தொகுதியின் பராமரிப்பு சார்ந்த பணிக்கு தடையாக இருக்கக்கூடிய அல்லது ஏற்றுக்கொள்ளத்தகாத ஒரு ஆபத்தைத் தோற்றுவிக்கக்கூடிய மரம் எதுவும் தனது வளவில் இல்லை என நிச்சயப்படுத்திக்கொள்ள நுகர்வோருக்கு* ***கடமை*** *உண்டு.(O4)*

## *பாகம் IV - இறுதி ஏற்பாடுகள்*

### *A. நடைமுறைக்கு வருதல்*

1. *குறித்த மின்சார சட்டத்தின் பிரிவு 3(1)(e) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள மின்சார நுகர்வோரின் உரிமைகளும் கடமைகளும் என்ற கூற்று ஆணைக்குழுவினால் 24.07.2014ஆம் திகதி அனுமதியளிக்கப்பட்டு 01.01.2015ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.*
2. *மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் அல்லது புதிய ஒழுங்குவிதிகள், நியதிகள், நிபந்தனைகள் முதலியன தொடர்பான அறிவுரைகள் ஆகியவற்றுக்கு அமைய*

*அவ்வப்பொழுது குறித்த கூற்று அடங்கிய இந்த ஆவணம் திருத்தப்படும். குறித்த கூற்று அடங்கிய இந்த ஆவணத்திற்கான அத்தகைய ஏதாவது திருத்தங்கள் முறையாக பொது மக்களின் கவனத்திற்குக்கொண்டு வரப்படும்.*

## *B. வெளியீடும் விளக்கங்களும்*

1. *ஆணைக்குழு அலுவலம், சகல வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் மற்றும் சேவை வழங்கும் தரப்பினது பிராந்திய/கிளை அலுவலகங்கள் ஆகியவற்றில் அலுவலக நாட்களில் (அதாவது மு.ப. 09:00 மணி முதல் பி.ப. 4:00 மணி வரை) வழமையான அலுவலக நாட்களின் போது பொது மக்களின் குறிப்புக்கு குறித்த கூற்று அடங்கிய இந்த ஆவணத்தின் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில) ஒரு பிரதி பார்வைக்கு கிடைக்கப்பெறும்.*
2. *சேவை வழங்கும் தரப்பினது அலவலகங்கள், ஆணைக்குழு அலுவலகம் அல்லது அரசாங்க வெளியீட்டுப் பணியகம் ஆகியவற்றிலிருந்து எந்த ஒரு நபருக்கும் குறித்த கூற்று அடங்கிய இந்த ஆவணத்தின் கடினப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இதன் மென்பிரதியை சேவை வழங்கும் அல்லது ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*
3. *இந்த ஆவணத்தில் காணப்படும் மின்சார நுகர்வோரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் தொடர்பான ஏதாவது விளக்கம் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் எந்த ஒரு நபருக்கும் கீழே தரப்பட்டுள்ள தொடர்புகொள்ள வேண்டிய விபரங்களினூடாக ஆணைக்குழுவின் நுகர்வோர் விவகாரங்கள் பிரிவுடன் தொடர்புகொண்டு அத்தகைய விளக்கத்தை அல்லது மேலதிகமான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

***நுகர்வோர் விவகாரங்கள் பிரிவு***
*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு*
*06-வது மாடி, இ.வ வர்த்தகக் கோபுரம்*
*இலக்கம் 28, புனித மைக்கல் வீதி*
*கொழும்பு 003*

*தொலைபேசி இலக்கம்: (011) 2392607/8*
*தொலைநகல் இலக்கம்: (011) 2392641*
*மின்னஞ்சல் முகவரி: consumers@pucsl.gov.lk*

***வரைவிலக்கணம்***

*'தொகையாக மின்சாரத்தை நுகர்பவர்' என்பது மின்சாரத்திற்கான கேள்வி ஒப்பந்த அடிப்படையில் 42kVA மின்சார அளவை அல்லது அதற்கு அதிகமான அளவை நுகர்வதற்கு உடன்பட்டுள்ள ஒரு மின்சார நுகர்பவர் எனப் பொருள்படும்.*

*'மின்சார நுகர்பவர்' என்பது சேவை வழங்கும் ஒரு தரப்பிடம் (குறித்த மின்சார சட்டத்தின் பிரகாரம்) அதாவது அந்த சேவை வழங்கும் தரப்பு விநியோகிக்கின்ற மின்சாரத்திலிருந்து ஒரு மின்சார விநியோகத்தைத் தேவைப்படுத்துகின்ற ஒரு நபர் எனப் பொருள்படும்.*

*'ஆணைக்குழு' என்பது 2002 இன் 35 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எனப் பொருள்படும்.*

*'மின்சார உற்பத்தி அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு' என்பது மின்சார உற்பத்தியை மேற்கொள்ளுவதற்கு ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஒரு தரப்பு எனப் பொருள்படும்.*

*'மாணிவாசிப்புக் கருவி' என்பது ஒரு மின்சார நுகர்பவருக்கு விநியோகிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை நிச்சயப்படுத்திக்கொள்ளுவதற்காக பயன்படுத்தப்படும் சேவை வழங்கும் தரப்புக்கு சொந்தமான மின்சார விநியோக உபகரணத்தின் ஒரு பாகம் எனப் பொருள்படும்.*

*'சில்லறையாக மின்சாரத்தை நுகர்பவர்' என்பது மின்சாரத்திற்கான கேள்வி ஒப்பந்த அடிப்படையில் 42kVA மின்சார அளவை அல்லது அதற்கு அதிகமான அளவை நுகர்வதற்கு உடன்பட்டுள்ள ஒரு மின்சார நுகர்பவர் எனப் பொருள்படும்.*

*'பிணை சார்ந்த வைப்புத் தொகை' என்பது மின்சார விநியோகம் தொடர்பில் சேவை வழங்கும் தரப்புக்கு வரலாம் எனும் பண ரீதியான சகல கொடுப்பனவுகளுக்குமான ஒரு பிணை உத்தரவாதமாக சேவை வழங்கும் தரப்புக்கு வழங்கப்படும் ஒரு பணத் தொகை எனப் பொருள்படும்.*

*'சேவை வழங்கும் தரப்பு' என்பது மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கும் ஏற்புடையவாறு ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபை (இ.மி.ச) அல்லது லங்கா இலெக்ரிசிற்றி (ப்ரைவட்) கம்பனி (லெகோ) எனப் பொருள்படும்.*

*'மின்சாரச் சட்டம்' திருத்தப்பட்டவாறான 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் எனப் பொருள்படும்.*

*'மின்சார விநியோக சேவைகள் சார்ந்த நியதி' என்பது சேவை வழங்கும் தரப்பு வழங்கும் சேவைகளை நிருவகிக்கின்ற செயன்முறை விதிகளை உள்ளடக்கியுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆவணம் எனப் பொருள்படும். சேவை வழங்கும் தரப்பின் சகல வாடிக்கையாளர் சேவை நிலையங்கள்,*

*பிராந்திய / கிளை அலுவலகங்கள் ஆகியவற்றில் வழமையான அலுவலக நேரங்களில் பொது மக்கள் இந்த ஆவணங்களை தமது குறிப்புக்காகப் பெற்றுக்கொள்ளலாம்.*

*'மின்சார செலுத்துகை அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு' என்பது மின்சாரத்தை செலுத்துவதற்கு ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபை எனப் பொருள்படும்.*